Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் ௦ யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 6 ஆம் நாள் ஷவ்வால் 22 (19-3-63) செவ்வாய்க்கிழமை இதழ் 39

# இதர தலைவர்களையும் அழைக்க யோசனை

## நேரடி இயக்கம்பற்றி சமஷ்டிக்கட்சித் தலைவர்

## அடுத்த மாதம் நிச்சயமாக நடவடிக்கை ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும் தமிழரசுக்கட்சியின் நேரடி நடவடிக்கையில் கலந்து கொண்டு ஒத்துழைப்புத் தருமாறு தமிழ்ப்பகுதிகளிலுள்ள இதர கட்சித் தலைவர்களுக்கும் பிரமுகர்களுக்கும் தமிழரசுக்கட்சி அழைப்புவிடவிருக்கிறது. இத்தகவலை தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் நேற்று 'ஈழநாடு' நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.**

*1961-ம் ஆண்டில் நடைபெற்ற சத்தியாக்கிரக இயக்கத்தில் கட்சி வேறுபாடின்றி தமிழ்ப் பேசும் மக்கள் ஈடுபட்டதுபோல நேரடிநடவடிக்கையிலும் மக்களை எவ்வித வேறுபாடின்றியும் சேர்த்துக் கொள்வதென்றும் நேரடி நடவடிக்கை விதிகளுக்கு அமையவே இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்களென்றும் திரு. இராசமாணிக்கம் கூறினர்.*

நேரடி நடவடிக்கை எது விதத்திலும் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகுமென்றும் சிங்களத் திணிப்பை அடுத்தமாதத்திலிருந்து தமிழ்ப் பகுதிகளில் தீவிரமாக்க அரசாங்கம் உத்தேசித்திருப்பதால் அதை முறியடிக்கும் வகையில் போராட்டம் அமையுமென்றும் தமிழரசுக்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

### எல்லாந் தமிழ் இயக்கம்

தமிழரசுக்கட்சி ஏப்ரல் 8-ந் திகதி தொடக்கம் 14-ந் திகதி வரை நடத்தவிருக்கும் தமிழ் இயக்கவாரம் நிரந்தர இயக்கமாக நடைபெறுமென திரு. இராசமாணிக்கம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

எல்லாம் தமிழ் இயக்கத்தின் வலிமையைத் தமிழ்ப் பேசும் மக்கள் இன்னும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. எல்லாம் தமிழ் இயக்கம் வலிவடையுமானல் அது தமிழுக்குரிய உரிமைகளைப் பெறும் சிறந்த வழிகளில் ஒன்ருகக் கருதப்படலாம். தமிழ் உரிமைப் போராட்டத்தில் கலந்து கொள்ள முடியாதவர்கள் தமிழ்த் தாய்க்குச் செய்யும் குறைந்த சேவையே எல்லாம் தமிழ் இயக்கத்தில் ஈடுபடுதலாகும். தமிழ் இயக்கத்தில் ஈடுபடும்போது தமிழர்கள் ஒவ்வொருவரும் தமிழ் மூலமே அரசாங்கத்துடன் தமது தொடர்புகளை வைத்துக் கொள்ள வேண்டும். தமிழ்மூலம் கடிதத் தொடர்புகளை வைப்பதன் மூலம் ஒவ்வொரு இலாகாவிலும் தமிழ் தெரிந்தவர்கள் இருக்க வேண்டியது அவசியமாகிவிடும். தமிழ்மூலம் எழுதப்படும் கடிதங்களுக்கு சம்பந்தப்பட்ட இலாகாக்களிடமிருந்து பதில் அனுப்புவதில் தாமதம் ஏற்படுத்தப்பட்டால் இதுசம்பந்தமாக பார்லிமெண்டிலும் வெளியிலும் நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ் இயக்கவாரம் நிரந்தரமாக நடைமுறையில் இருந்து கொண்டுவரும். தமிழ் இயக்கவாரம் சம்பந்தமாக சுவரொட்டி விளம்பரங்களும் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்படவிருக்கின்றன. நாடெங்கிலும் நடைபெறும் கூட்டங்களில் தமிழ் இயக்கவாரம் பற்றிப் பிரசாரம் செய்யப்படும்.

## மலைநாட்டில் இப்பொழுது இயக்கம் தொடங்காது

### இரு மாகாணங்களில் மட்டுமே நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழரசுக கட்சியின் நேரடி நடவடிககை வடகககு கிழக்கு மாகாணங்களில்மட்டுமே நடத்தப்படவிருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் மலைநாட்டில் இந்தச் சமயத்தில் நேரடி நடவடிக்கையை விஸ்தரிக்கும் நோக்கம் கட்சிக்கு இல்லையென்று அறியப்படுகிறது.

நேரடிப் போராட்டம் சம்பந்தமான திட்டங்கள்பற்றி கட்சியின் பொதுச்சபை அடுத்த மாதம் 6-ம், 7-ம் திகதிகளில் வவனியாவில் கூடி இறுதி முடிவுசெய்யவிருக்கிறது. சில சமயம் நேரடி நடவடிக்கை கமிட்டிக்கூட்டம் சில தினங்களுக்கு ஒத்திவைக்கப்படக்கூடுமெனவும் தெரியவருகிறது. எது எப்படியிருந்தாலும் நேரடி நடவடிக்கை அடுத்த மாதம் ஆரப்பமாவது உறுதி.

நேரடி நடவடிக்கைக் குழு இவ்வாரம் கொழும்பில் கூடி ஆராயவிருக்கிறது.

இம்மாதம்28-ம் திகதி கட்சியின் செயற்குழுக் கூட்டம் மட்டககளப்பில் நடைபெறவிருககிறது.

### சிரியா அரசாங்கம் இலங்கை அங்கீகாரம்

கொழும்பு, செவ்வாய்

சிரியாவின் புதிய அரசாங்கத்தை இலங்கை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

இலங்கை பிரதமர் சிரியா பிரதமருக்கு அனுப்பியுள்ள ஆசிச் செய்தியில், அரசாங்கத்தின் வெற்றியைப் பாராட்டி புதிய அரசாங்கத்தின் கீழ் மக்கள் நல்வாழ்வு வாழ வழி பிறக்குமெனத் தாம் நம்புவதாகவும், இலங்கை - சிரியா ஆகிய இரு நாடுகளுக்கிடையே நல்லுறவு வளருமென்ற நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## நாடெங்கிலும் ஒரே விலையில் கூப்பனரிசி

### கிளிநொச்சி எம். பி. யோசனை

யாழ்ப்பாணம், திங்கள்

**இலங்கை மக்களின் மிக முக்கிய உணவாக இருக்கும் அரிசியை வெவ்வேறு பகுதிகளிலும் வித்தியாசமான விலையில் விற்பனைசெய்து நாட்டின் ஒரு பகுதி மக்களுக்குப் பாரபட்சம் காட்டுவதை அரசாங்கம் தவிர்க்கவேண்டும். மற்ற உணவு வகைகளை விட மக்களுக்கு மிகவும் முக்கியமான அரிசியை நாட்டின் சகல பாகங்களிலும் ஒரே விலையில் விற்பனை செய்ய அரசாங்கம் ஒழுங்கு செய்ய வேண்டும் என்று கிளிநொச்சி எம். பி.யும் ஓய்வுபெற்ற நீர்ப்பாசண உதவி டைரக்டருமான திரு. ஏ. சிவசுந்தரம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.**

அரசியலில் முக்கிய ஸ்தானமாக விளங்கும் கொழும்பிற்கும் அதைச் சார்ந்த அயல் கிராமங்களுக்கும் தான் நன்மை செய்வது தனது கடமை என அரசாங்கம் கருதக்கூடாதென்றும், மற்றப் பகுதி மக்களைப் புறக்கணித்து நடாத்தாமல் அவர்களின் நன்மையையும் கருதவேண்டும் என்றும் ஒவ்வொரு மேடையிலும்விவசாயிகளைபாதுகாத்து வருவதாகக் கூறும் அரசாங்கம்அவர்களுக்குமுக்கியமாகநன்மை செய்யவேண்டும் என்றும் திரு. சிவசுத்தரம் தனது அறிககையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

கூப்பன் அரிசி வழங்க ஆரம்பித்து இருபது வருட காலமாகியும் கொழும்பில் விற்பனை செய்யும் அதே விலையில் கூப்பன் அரிசியை யாழ்ப்பாணத்திற்கும் விநியோகிப்பதால் யாழ்ப்பாண மக்கள் பெரும் நன்மை அடைந்துள்ளார்கள் என்பதை வர்த்தக அமைச்சர் இப்பொழுதுதான் கண்டுபிடித்திருக்கிருர். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஒரே விலையில் கூப்பன் அரிசியை கடந்த காலங்களில் விநியோகிப்பதற்கு முக்கிய காரணம் ஒன்று இருந்தது. யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள துறைமுகங்களை உபயோகித்து அங்கேயே பொருள்களை இறக்குமதி செய்ததே அந்தக் காரணமாகும். இது ஏன் தொடர்ந்து நடைபெறக் கூடாது என்பதற்கான காரணம் எதுவுமில்லை. தீவின் கரையோரப் பகுதிகளில் இயற்கையாகவே கொழும்பு, காலி, திருக்கோணமலை, கல்குடா, மட்டக்களப்பு, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உகந்த துறைமுகங்கள் இருக்கின்றன. உணவுப் பொருட்கள் கொண்டு வரும் கப்பல்களை இத்துறைமுகங்களுக்கு அனுப்பவேண்டியது அரசாங்கததின் கடமையாகும். இதனல் ஏற்றுமதி இறக்குமதிச் செலவுகளை குறைத்துக்கொள்வதுடன் வீண்தாமதத்தையும் தவிர்த்து நாட்டின் பல பாகங்களிலும்உள்ள தொழிலாளர்களுக்குதொழில் வசதியும் அளிக்கமுடியும்.

தம் தேவைக்கு அதிகமாக நாலு மடங்கு நெல் உற்பத்தி செய்யும் அநுராதபுரத்திலும், பொலநறுவையிலும் கூப்பன் அரிசி கொத்து 28 சதத்துக்கு விநியோகிக்கப் படுகிறது. தமது தேவைக்கு அதிகமாக இரண்டரை மடங்கு உற்பத்தி செய்யும் கிழக்கு மாகாணத்தில் கூப்பன் அரிசி கொத்து 29 சதமாகவும், தனது தேவைக்குச் சிறிது கூடிய அளவில் உற்பத்தி செய்யும் யாழ்ப்பாணத்தில் கொத்து 29 சதமாகவும் விநியோகிக்கப்படுகின்றது. ஆனல் இதே நேரத்தில் அளவுகத அதிகமாக நெல் உற்பத்தி செய்யும் மேற்குறிப்பிட்ட பகுதிகளின் அரிசியில் தங்கியிருக்கும் கொழும்பில் கொத்து

(8-ம் பக்கம் பார்க்க)

சிறந்த சேமிப்பு
அதிக ஆதாயம்
உயர்ந்த வட்டி

6%

உறுதியான இடம்

சிலோன் றிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

### தேவை

கால்நடை, கோழி உணவு விற்பனைக் கடையில் பொறுப்புடன் வேலை செய்யக்கூடிய படித்த நேர்மையான இளைஞன் தேவை. ராணி ஸ்ரோர்ஸ், சங்கானை என்ற விலாசத்திற்கு இம்மாதம் 25-ந் திகதிக்கு முன் நேரில் வரவும். 78

### நடிகைகள் தேவை

கலைவாணர் நாடக மன்றம் தயாரிக்கும் புதிய நாடகங்களில் நடிப்பதற்கு நடிகைகள் தேவை. முன் நடித்துப் பழக்கமில்லாவிடினும், நடிக்க ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். 25-3-63 க்கு முன் விண்ணப்பிப்பது நல்லது. செயலாளர், வண்ணை கலைவாணர் நாடக மன்றம், 94, 96, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 781

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், செவ்வாய்
"திருக்குறள் உலக மக்கள் அனைவரும் போற்றும் பொது நூலாக விளங்குகிறது. இந்நூல்தான் வள்ளுவரின் புகழ் உலகம் எங்கும்பரவியுள்ளது" என்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் திரு. வி. க. ஆறுமுகம் சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் பேசுகையில் கூறினார்.

சமயப் பிரசாரகர் திரு. க. முருகேசு வள்ளுவரால் பாடப்பெற்ற குறட்பாக்களே அவரின் உயரிய வாழ்வினை எடுத்துக்காட்டுகிறதென்றும், ஆகவே நாமும் வள்ளுவரின் வாழ்வைப் பின்பற்றி வாழ முயற்சிசெய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி பேசும்போது குறளின் பொருள் அறிந்து அதற்கேற்ப வாழ முன்வரவேண்டுமென்றும் அப்போதுதான் வள்ளுவருக்கு விழா எடுத்தலாகிய பலனை அடைய முடியும் என்றும் இல்லந்தோறும் திருக்குறள் மிளிரவேண்டுமென்றும் குறிப்பிட்டார். செயலாளர் மு. கதிர்காமநாதன் நன்றியுரை கூறினார்.

## வெளியேறுகின்றனர்

நைரோபி, மார்ச் 18
சோமாலிக் குடியரசு பிரிட்டனுடனுள்ள ராஜீய உறவை முறித்துக்கொண்டதால் சோமாலியிலுள்ள பிரிட்டிஷ் பிரஜைகள் சோமாலியிலிருந்து வெளியேறத்தயாராகிக்கொண்டிருக்கின்றனர்.

## செய்தித் திரட்டு

### கடும் வரட்சி

மன்னார், திங்கள்
மன்னார் பகுதியில் மழைக்குப் பின் தற்பொழுது கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது. இந்த வெப்பத்தினால், அநேகருக்குக் கண்நோய், தலைவலி முதலிய நோய்கள் ஏற்பட்டிருக்கின்றன. தண்ணீரால் சூழப்பட்ட வீடுகள் எல்லாம் தண்ணீர் வற்றிக் காணப்படுகின்றன. இக்கடும் வரட்சி நீடிக்குமானால் குடி தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படலாம் எனத் தெரியவருகிறது.

### போலியோ தடுப்பு இயக்கம்

கொழும்பு, திங்கள்
போலியோ தடுப்பு இயக்கம் நாடு பூராவும் அடுத்த மாத மத்திய பகுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. குழந்தைகளுக்கு ஊசி பாய்ச்சும் நிலையங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

### டாக்ஸி சாரதி கொலை வழக்கு

புத்தளம், திங்கள்
புத்தளம் - அனுராதபுரம் கொலைவழக்கு விசாரணை இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. கார்ச் சாரதி மித்ரி பாலாவைக் கொலை செய்ததாக முத்துபண்டா, ஓடிரிஸ் ஆகிய இருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

### தற்காலிக வேலைநீக்கம்

குருநாக்கலை, திங்கள்
குருநாக்கலைமாவட்ட கல்விக் காரியாலயத்தைச் சேர்ந்த குமாஸ்தா ஒருவர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மதிய போசன உணவில் 20,000 ரூபாய் மோசடி சம்பந்தமாக இவர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

### நீரில் மூழ்கி மரணம்

பத்தேகம, திங்கள்
பாடசாலை இன்ஸ்பெக்டரான திரு. வெல்லபுல ஆராச்சி குணசேன என்பவர் குளம் ஒன்றில் நீராடிக்கொண்டிருந்த சமயம், நீரில் மூழ்கி மரணமானார். இவருக்கு ஒன்பது குழந்தைகள் உண்டு.

### பாடசாலை தீக்கிரையானது

ஹப்புத்தளை, திங்கள்
கலுபஹனையிலுள்ள அரசாங்க கயவன் பாடசாலையொன்று தீப்பிடித்து சாம்பலானது. இது சம்பந்தமாக ஹப்புத்தளை பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர்.

### வருடாந்தப் போட்டி

கம்புறுபிட்டியா, திங்கள்
கம்புறுபிட்டியாவில் நடைபெறும் பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் ஆண்கள், பெண்கள் உட்பட சமார் 500 விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்வார்கள். இந்த விளையாட்டுப் போட்டியில் 48 பாடசாலைகள் கலந்துகொள்கின்றன.

### கொலைகள் குறைந்தது?

கொழும்பு, திங்கள்
மார்ச் மாதத்தில், கைமோசக் கொலைகள் சிறிது குறைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இவ்வருடத்தின் முதலிரு மாதங்களிலும் அதிகமான, (ஒரு நாளைக்கு இரு கொலைகள் வீதம்) கைமோசக் கொலைகள் நடைபெற்றதாக பொலிஸ் அறிக்கை கூறுகிறது.

## தலைவருக்கு பாராட்டு

மாவிட்டபுரம், திங்கள்
தெல்லிப்பழை கிராமசபைத் தலைவராக திரு. த. செல்வரத்தினம் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளமையைக் கௌரவிக்கும் வகையில் விளிசிட்டி சனசமூக நிலைய ஆதரவில் திரு. சே. சத்தியோசாதம் தலைமையில் வரவேற்புபசார விழாவொன்று நடைபெற்றது. விளிசிட்டி ஐக்கிய பண்டகசாலையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு விழா மண்டபத்தை வந்தடைந்தது. கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. வ. கந்தையா, திருவாளர்கள் கா. சரவணமுத்து, சி. சிவஞானம், பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். திரு. க. கோவிந்தசாமி நன்றி கூறினார்.

## வைத்திய பிரதிநிதிகளை மந்திரி அழைத்துள்ளார்

கொழும்பு, திங்கள்
அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தையும் வைத்திய நிபுணர் சங்கத்தையும் சுகாதார மந்திரி திரு. ஏ பி. ஜயசூரியா தன்னைச் சந்திக்குமாறு அழைத்துள்ளார். தனிப்பட்ட பயிற்சி பற்றி மந்திரிசபை செய்துகொண்ட முடிவு பற்றிப் பரிசீலனை செய்வதற்காகவே இரு சங்கப் பிரதிநிதிகளையும் புதன் கிழமை மாலை 4 மணிக்குச் சந்திக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

மந்திரிசபை தனிப்பட்ட பயிற்சி பற்றிச் செய்துகொண்ட முடிவை மார்ச் முதலாந் திகதி அமுலுக்குக்கொண்டுவந்திருக்க வேண்டிய பொழுதும்இதுவரை அதைஅமுலுக்குக்கொண்டுவராததுபற்றிபிரதிநிதிகள்வருத்தம் தெரிவித்தார்கள். திரு. கஸ்பெர்ஸ் தனிபட்டபயிற்சிக்குஅனுமதி அளிப்பதால் ஏற்படக்கூடிய நிதிநிலையை பற்றி ஆராய்ந்து சில தீர்மானங்களை மந்திரியிடம் சமர்ப்பித்திருந்தார். இத் தீர்மானங்கள் பற்றியே புதன் கிழமை ஆராயப்படலாம் என நம்பப்படுகிறது. திரு கஸ்பெர்ஸும் இக்கூட்டத்திற்கு அழைக்கப்படலாம் எனப் பேசப்படுகிறது.

### நித்திரையின் போது துப்பாக்கிச் சூடு

தங்காலை, திங்கள்
துகேவெல என்ற இடத்தைச் சேர்ந்த 20 வயதுள்ள வி. பி. ஜோன் என்பவர், அவரது வீட்டு வராந்தையில் நித்திரை செய்துகொண்டிருந்த சமயம், துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். இது சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட டொன் டேவிட் என்பவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

### கலாச்சார தூதுகோஷ்டி

கண்டி, திங்கள்
இலங்கை வந்திருக்கும் மேற்கு ஜெர்மன் கலாச்சார தூதுகோஷ்டியினர் தலதா மாளிகைக்கு விஜயஞ் செய்தனர். தலதா மாளிகைக்கு இத் தூதுகோஷ்டியினர், இரண்டு வெள்ளித் தட்டுகளை அன்பளித்தனர்.

### டாக்ஸியில் 'கசிப்பு'

வெலிக்கடை, திங்கள்
வனத்தமுல்லையிலிருந்து ஒபயசேகரா நகரத்துக்கு ஒரு டாக்ஸியில் 60 கசிப்புப் போத்தல்களைக் கொண்டுசென்ற மூவரையும், டாக்ஸியையும் வெலிக்கடைப் பொலிஸார் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

# 'பட்டதாரி மாணவருக்கு ராணுவப் பயிற்சி'

## தேரோ யோசனை

வத்தளை, திங்கள்
'பல்கலைக் கழகத்தில் பயிலும் பட்டதாரி மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி மிகவும் அவசியமானதாகும். இராணுவப் பயிற்சி இல்லாத பல்கலைக்கழகக் கல்வி முற்றுப்பெறாது'.

வித்தியாலங்கார பல்கலைக் கழக மாணவர்கள் யூனியன் கூட்டத்தில் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பம்பரெண்டி ஸ்ரீ சீவாலிதேரோ பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இலங்கையிலுள்ள இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி மிகவும் அவசியமென்றும் இந்த நாட்டில் கஷ்டம், துயரம் ஏற்படும்பொழுது இளைஞர்களின் உதவி மிகவும் தேவைப்படுமென்றும் கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது: "தென் இந்தியாவிலுள்ள நான்கு பல்கலைக்கழகங்களில் கட்டாய இராணுவப் பயிற்சி உண்டு. இப்பயிற்சிக்காக ஒரு வாரத்தில் நான்கு மணித்தியாலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இராணுவப் பயிற்சி பெறாத மாணவர்களுக்கு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலை ஏற்படும்.

இப்படியான இராணுவப் பயிற்சி இங்குள்ள பட்டதாரி மாணவர்களுக்கும் அவசியமானதாகும். நாடு துயரப்படும்பொழுது, எமது நாட்டைக் காப்பாற்றுவதற்கு இளைஞர்களுக்கும் பட்டதாரி மாணவர்களுக்கும் இராணுவப் பயிற்சி அவசியமானதாகும்".

வித்தியோதய பல்கலைக் கழகத்தின் சார்பில் திரு. எல். ஜி. ஹிவேஜ் பேசுகையில் பட்டதாரி மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அவசியம் தான் என்று கூறினார்.

# "தோட்டத் தொழிலாளருக்கு அரசாங்க வீத அலவன்ஸ்"

## இ. தொ. ச. மகாநாட்டில் தீர்மானம்

நுவரேலியா, திங்கள்
சகல தோட்டத் தொழிலாளர்களுக்கும் அரசாங்க வீதப்படி அலவன்ஸ் வழங்க வேண்டுமென்று கோரும் ஓர் தீர்மானம் நுவரேலியாவில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் யூனியன் சம்மேளன விசேஷ மகாநாட்டில் நிறைவேறியது.

விசேஷ மகாநாட்டில், இ. தொ. யூ சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசி திரு என். சண்முகதாசன் பேசுகையில், தோட்டத் தொழிலாளர்களின முக்கியமான, பொருளாதார கோரிக்கை குறித்து ஆராய்வதற்காக, ஒரு விசேஷ மகாநாடு கூட்டப்பட்டது இதுவே முதற்தடவையென்றும், தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்க வீதப்படி அலவன்ஸ் வழங்க வேண்டுமென்று கோரும்முகமாகவே விசேஷ கூட்டம் கூடியுள்ளதாகவும் கூறினார்.

அவர் தொர்ந்து பேசியதாவது: "தோட்டத் தொழிலாளர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளம் வழங்கப் படுகிறது தொழிற் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் சகோதர தொழிலார்களிடையே பாகுபாடு கூடாது. இந்தநாட்டிலுள்ள சிங்கள, தமிழ் தொழிலாளர்கள் அனைவரும் சகோதர மனப்பான்மையுடன் ஒத்துழைக்க வேண்டும்.

பலகோரிக்கைகளில்நாங்கள் வெற்றி பெற்றிருக்கின்றோம். ஆனால் இப்பொழுது தோட்டத் தொழிலாளர்களுக்கான கோரிக்கையில் நாம் வெற்றி பெற போராடவேண்டும்."

"தோட்டத் தொழிற்சங்கங்கள் கூடாக இணைந்து சகல தோட்டத் தொழிலாளர்களுக்கும், அரசாங்க வீதப்படி அலவன்ஸ் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையில் வெற்றி பெறுவதற்கு கூட்டாக இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று" கோரும் ஓர் தீர்மானமும விசேஷ மகாநாட்டில் நிறைவேற்றப் பட்டது.

## பதிவுத் தபால்கள் பாதுகாப்பானதல்ல?

கொழும்பு, திங்கள்
பதிவு செய்யப்பட்டு அனுப்பப்படும் கடிதங்கள் (பதிவுத் தபால்கள்) அவ்வளவு பாதுகாப்பானதல்ல என்றும், உரியவரிடம் போய்ச் சேர்வதில் சில சமயம் தாமதம் எடுக்கலாம் அல்லது தவறிப்போகலாம் என்றும் கூறப்படுகிறது.

தபாற்பகுதியினரிடம் ஏராளமான பதிவுத்தபால்கள் காணமற் போனதாகத் தெரியவருகிறது.

பதிவுத்தபால்கள் காணமற் போனது சம்பந்தமாக, ஏராளமானவர்கள் பெரிய தபால் காரியாலயத்தில் முறைப்பாடு செய்கின்றனர்.

பெரிய தபால் காரியாலயத்திலிருந்து பேலியகொடைக்கு அனுப்பப்பட்ட பதிவுத் தபால் ஒன்று 18 மாதகாலமாகியும் இன்னும் உரியவரிடம் போய்ச் சேரவில்லை. குறிப்பிட்ட பதிவுக் கடிதத்துக்குள் 45 ரூபாய் பெறுமதியுள்ள முத்திரைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக குறிப்பிட்ட பதிவுக் கடிதத்தை அனுப்பியவர் தெரிவிக்கையில், தாம் அனுப்பிய பதிவுத் தபால் காணமற்போனது குறித்து போஸ்ட்மாஸ்டர் ஜெனரலிடம் முறையிட்டுள்ளதாகவும், அவர்கள் அதற்குப் பதிலளித்திருந்தார் என்றும், அவர்கள் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்ட பதிவுக்கடிதம் காணமற் போய்விட்டதென்றும் அந்தக் கடிதம் எப்படிக் காணமற் போனது என்பது தெரியவில்லை என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது என்றும் கூறினார்.

## யங்லயன்ஸ் 'பி' கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்
யங்லயன்ஸ் 'பி' கோஷ்டிக்கும் வை. எம். எம். ஏ. 'பி' கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் யங்லயன்ஸ் கோஷ்டி வெற்றிபெற்றுள்ளது.

வை. எம். எம். ஏ. மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் யங்லயனஸ் கோஷ்டி ஒரு இன்னிங்ஸாலும் 42 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது. யங்லயன்ஸ் கோஷ்டிக்கு செல்வன் தேவநாயகம் தலைமை வகித்தார்.

# இந்திய காவல் கைதிகளும் சீனக் கைதிகளும்

புதுடில்லி, மார்ச் 18

சீனவசமுள்ள இந்திய காவல் கைதிகளைச் சந்தித்து அவர்களின் நிலைமைகளை அறிந்துகொள்வதற்கு தமது பிரதிநிதியொருவரை அனுமதிக்கும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சீனவிடம் தொடர்ந்து கேட்டுவந்தபோதிலும், சீன இன்னும் அதற்கு அனுமதியளிக்கவில்லை. இந்தியக் காவல் கைதிகளை சீன எப்படி நடத்துகிறதென்பது தெரியவில்லையென்று இந்திய வெளி விவகார அமைச்சு வெளியிட்ட ஒரு குறிப்புத் தெரிவிக்கிறது.

இதற்கு மாருக இந்தியாவில் காவலில் வைக்கப்பட்டுள்ள சீனர்கள் நல்ல முறையில் நடத்தப்படுகிருர்களென்றும் அவர்கள் புகார் எதுவும் தெரிவிக்கவில்லையென்றும் அவர்களைப் பார்வையிட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சபை பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

சீனக் கைதிகள் போதிய அளவு பெரிய முகாமில் வைக்கப்பட்டிருப்பதாகவும் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் முகாமில் தண்ணீர் வசதி, வெளிச்ச வசதி, வைத்திய வசதி ஆகியவை இருப்பதாகவும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். முகாமிலேயே தனியாக ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறதென்றும் காவல் கைதிகளைத் தனியாகவும் கோஷ்டி கோஷ்டியாகவும் தாம் சந்தித்துப் பேசியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

# இந்திப் பிரியர்கள் சிறிது தியாகம் செய்யவேண்டும்

## ஆங்கிலத்தை தொடர்ந்து வைத்திருப்பதுபற்றி திரு. சாஸ்திரி

புதுடில்லி, மார்ச் 18

இந்திப் பிரியர்கள் நாட்டின் ஒற்றுமையைக் கருதி சிறிது தியாகம் செய்யவேண்டும் என்று உள்விவகார மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி கேட்டுக்கொண்டார்.

ஆங்கிலத்தை 1965-ம் ஆண்டுக்குப் பின்னரும் உத்தியோக மொழியாக நீடிக்கும் புதிய மசோதாபற்றிக் குறிப்பிடுகையிலேயே திரு. சாஸ்திரி இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

இந்தியை தேசியமொழியாக ஏற்றுக்கொண்டதன்மூலம் தென்னுடு ஏற்கனவே சிறிது தியாகம் செய்துவிட்டதென்றும் இந்தி பேசாத மக்கள் மீது இந்தியை வலுக்கட்டாயமாகத் திணிக்காமல், இந்தியை அவர்கள் தாமாகவே விரும்பி ஏற்றுக்கொள்ளும்வரை ஆங்கிலத்தைத் தொடர்ந்து இணைப்பு மொழியாக வைத்திருப்பதற்கு இணங்கும் வகையில் இந்த மசோதாவுக்கு ஆதரவு அளிப்பதன்மூலம் இந்திப் பிரியர்கள் சிறிது தியாகம் செய்ய வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஆங்கிலம் எப்போதுமே மேலாதிக்க மொழியாக இருந்துவிடப்போகிறதென்று எவரும் அஞ்ச வேண்டியதில்லையென்றும் இந்தி படிப்படியாக அதற்குரிய இடத்தில் அமர்ந்துவிடுமென்றும் திரு. சாஸ்திரி கூறினர்.

இந்த மசோதா நாட்டின் ஒற்றுமையைக் கருதியே கொண்டுவரப்படுகிறதென்றும் தற்போதைய நிலையில் இந்த மசோதாவைத் தாமதித்து வைப்பதால் நன்மையெதுவும் விளையப்போவதில்லையென்றும் கூறினர்.

## இந்தியரின் விழிப்புணர்ச்சி

நியுயோர்க், மார்ச் 18

சீன ஆக்கிரமிப்பினல் இந்திய மக்களுக்கிடையில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று அமெரிக்க உதவி ராஜாங்க மந்திரி திரு. பவல்ஸ் டெலிவிஷன் நிகழ்ச்சி யொன்றில் கூறினர்.

இந்தியா-பாகிஸ்தான் உறவு நிலை சீராகுமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## புதிய பார்சபை

கொழும்பு, திங்கள்

புதிய பார்சபையை நேற்று காணிவிவசாய, நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வா நியமித்தார். 10 நாட்களுக்கு முன்னர் பார்சபை ராஜினமாச் செய்ததைத் தொடர்ந்து புதிய பார்சபை நியமிக்கப்பட்டுள்ளது.

புதிய பார்சபையில் அங்கத்துவம் வகிப்பவர்கள் பின்வருமாறு: திரு. அன்ரன் மக்செயிஸர் (தலைவர்), டாக்டர் ஜே. அமரசிங்கா, திரு. சிறில் முத்துக்குமாரு, திரு. ஏ. ஆர். எம். ஜயவர்த்தன, திரு. என். விஜயசிங்கா, டாக்டர் ஜயசிங்கா, திரு டி. என். செற். மகமட்.

## பைக்குள் வடி சாராயம்!

புத்தளம், திங்கள்

கல்பிட்டியாவைச் சேர்ந்த 15 வயதுள்ள பாடசாலை மாணவன் ஒருவன் பையொன்றில் ஐந்து போத்தல்கள் வடிசாரயத்தை எடுத்துச் சென்ற சமயம், புத்தளம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த எல். பி. பெரேராவினுல் கைதுசெய்யப்பட்டான்.

பாடசாலைப் புத்தகங்களை எடுத்துச் செல்லும் பைக்குள் வடிசாரய போத்தல்கள் இருந்ததாம்!

குற்றத்தை ஒப்புக்கொண்ட அச்சிறுவனுக்கு புத்தளம் தற்காலிக மாஜிஸ்டிரேட் திரு. எஸ். செல்லையா 150 ரூபா அபராதம் விதித்தார்.

## பிரான்ஸில் வேலைநிறுத்தம்

பாரிஸ், மார்ச் 17

பிரெஞ்சு சுரங்கத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் மூன்ருவது வாரமாகத் தொடர்ந்து நடைபெறுகிறது.

சுரங்கத் தொழிலாளருக்கு அனுதாபந் தெரிவித்து ரயில்வே ஊழியர்கள் சென்ற வெள்ளிக்கிழமை 24 மணி நேரம் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். அடுத்த வாரம் மீண்டும் அடையாள வேலைநிறுத்தம் செய்வது பற்றி ஆலோசிக்கப்படலாமெனத் தெரிகிறது.

மின்சாரத் தொழிலாளர்கள் நாளை கூடி ஆராயவிருக்கிறனர்அடையாள வேலைநிறுத்தம் பற்றி இவர்கள் ஆராயவிருக்கிருர்கள். அநேகமாக நாட்டின சகல பிரிவுத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்யக்கூடுமெனக் கூறப்படுகிறது.

## செயற்கை கிரகத்தினுள் 5 மாதம் கிடந்தார்

வாஷிங்டன், மார்ச் 17

வெளிவான மண்டல ஆராய்ச்சியில் ஒரு அம்சமாக செயற்கைக் கிரகப் பேழையென்றுக்குள் ஐந்து மாதகாலமாக அடைக்கப்பட்டிருந்த 36 வயதான அமெரிக்கர் ஒருவர் நல்ல சுகமாகவே இருக்கிருர் என்று இன்று அறிவிக்கப்பட்டது. ஆனல் காலவித்தியாச உணர்வை அவர் இழந்துவிட்டார். சில சமயம் 30 மணிநேரம் கூட அவர் நித்திரை செய்யாமலிருந்திருக்கிருர். அவரிடம் மன எரிச்சலுக்கான அறிகுறிகள் தன்பட்டனவாம்.

## ரஷ்யாவுக்கு அமெரிக்கா ஆட்சேபம்

வாஷிங்டன், மார்ச் 17

சோவியத் யுத்த விமானங்களிரண்டு அமெரிக்காவில் அலாஸ்கா பிரதேசத்தில் வானவெளிப் பிராந்தியத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாகவும் இவைகளைத் தடுப்பதற்கு அமெரிக்க விமானம் சென்ற பொழுது அந்த விமானங்கள் இரண்டும் சோவியத் யூனியனை நோக்கி விரைந்துசென்றுவிட்டதாகவும் அமெரிக்கா அறிவித்தது. இச் சம்பவம்பற்றி சோவியத் யூனியனுக்கு அனுப்பிய ஒரு ஆட்சேபக் குறிப்பில் இதுபோன்ற சம்பவம் மீண்டும் நடைபெருமலிருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அமெரிக்கா கேட்டுள்ளது.

# 'கீரிமலையை புனித நகரமாக பிரகடனப்படுத்தவேண்டும்'

## முன்னுள் கி. ச. தலைவர் யோசனை

கீரிமலை, திங்கள்

'இன்றுள்ள அரசாங்கம் சிங்கள மக்களின் புராதனப் பெருமைவாய்ந்த அனுராதபுரம், களனி ஆகிய இடங்களைப் புனித நகரமாகப் பிரகடனஞ் செய்துள்ளது. அதே போல சைவ மக்களின் புராதனப் பெருமைமிக்க கீரிமலையையும் புனித நகரமாகப் பிரகடனஞ் செய்யவேண்டும். இதனைச் செய்ய கிராமசபை நடவடிக்கையெடுப்பினும் அதனை அரசாங்கம் அனுமதிக்குமா என்பது சந்தேகமானது" என்று மயிலிட்டி கிராம சபையின் முன்னுள் தலைவர் திரு. ஸ்ரீபாஸ்கரன் நேற்றிரவு கீரிமலையில் நடைபெற்ற வரவேற்புபசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

தெல்லிப்பழை கிராமசபைக்கு திரு. த. செல்வரத்தினம் தலைவராகவும், திரு ந. சுப்பிரமணியம் உப தலைவராகவும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டதனைக் கௌரவிக்குமுகமாக நேற்றிரவு கீரிமலை நகுலேஸ்வர சனசமூக நிலையத்தினதும் பொதுமக்களினதும் சார்பில் நகுலேஸ்வர சனசமூக நிலைய முன்றலில் வரவேற்புபசாரவிழா நடைபெற்றது. திரு. கா. வேலுப்பிள்ளை இவ்விழாவிற்குத் தலைமைவகித்தார்.

கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலை தலைமை ஆசிரியர் திரு. வ. கந்தையா பாராட்டுரை வழங்கும்போது பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர்களே தமது நேரத்தைச் செலவிடுவதற்காக ஸ்தலஸ்தாபன சபைகளின் தலைவராக வர விரும்புவரென்றும், உத்தியோகத்தர்கள் இத்தகைய பதவிகளில் ஈடுபடின் ஸ்தலஸ்தாபன ஊழியர்களின் செயலை நேரடியாகக் கண்காணிக்க முடியாமல்போய்விடுமென்றும் நமது முன்னேர்களின் தர்மம் எம்மையும் காப்பாற்றும் என்பதற்கு கிராம சபையின் தலைவர் தெரிவு ஒரு சான்ருகும் என்றும் கூறினர்.

திரு. த. செல்வரத்தினம் தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:-

கீரிமலைக்கடற்கரை கடலால் அரிக்கப்பட்டுவருகிறது. இதனைத் தவிக்க அணைகட்டும் திட்டமொன்று உள்ளது. பெரும் கடனில் கிராமசபை மூழ்கியுள்ள சமயத்தில் தலைமைப் பதவியைப் பெற்றுள்ளேன். கிராமசபையை கடனிலிருந்து காப்பாற்ற நாம் எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பொதுமக்களின் ஆதரவு அவசியம்."

திருவாளர்கள் வி. சிவசுப்பிரமணியம், வி. சிவபுண்ணியம், திரு. தருமராசா, வழக்கறிஞர் ஆ. வ. சதாசிவம் ஆகியோரும் பேசினர். திரு. மகேந்திரன் நன்றி கூறினர்.

## ஐக்கிய முன்னணி அமைப்பதில் முட்டுக்கட்டையில்லை

— திரு. பிலிப்

செங்கடகலை, திங்கள்

"டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா ஆகியோருக்கும் எனக்குமிடையே ஒரு இடதுசாரி ஐக்கிய முன்னணியை நிறுவுவதில் எந்தவிதமான முட்டுக்கட்டைகளும் இல்லை. மூன்று அரசியல்கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஒரு இடதுசாரி ஐக்கிய முன்னணி உருவாக்குவதில் தடைகள் எதுவுமில்லை."

கண்டியில் நேற்று நடைபெற்ற மக்கள் ஐக்கியமுன்னணிக் கிளைகளின் மகாநாடு ஒன்றில் மக்கள் ஐக்கியமுன்னணிக் கட்சித் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

இடதுசாரிக்கட்சிகள் மூன்று ஒன்றுசேர்ந்து ஐக்கிய இடதுசாரி முன்னணியொன்றை உருவாக்குவதென்ற தீர்மானம், மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேறியது. மகாநாட்டுக்கு திரு பிலிப் குணவர்த்தன தலைமை வகித்தார்.

தனிச்சிங்கள மசோதா, இந்தியமசோதா ஆகியவை கவனிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானம் வற்புறுத்துகிறது

# "பகைமையினுல் பிரச்னை தீராது"

## கம்யூனிஸ்ட் பிரமுகர் கருத்து

யாழ்ப்பாணம், செவ்வாய்

"பகைமையினுல் இனப் பிரச்னை தீர்க்கப்பட்டுவிட முடியாது. சிநேக மனப்பான்மை, சகோதரத்துவம் என்பவற்ருல் சாதிப் பிரச்னையை மட்டுமன்றி இனப் பிரச்னையையும் தீர்க்க முடியும்" என்று வடபகுதி கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. வ. பொன்னம்பலம் இணுவில் கலாஜோதி சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் பேசுகையில் கூறினர்.

சனசமூக நிலையத்தின் நாலாவது ஆண்டுவிழா சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. திரு.வ. பொன்னம்பலம் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டதாவது:

தீண்டாமை ஒழிப்புப் பற்றித் தீர்வு காண்பதற்கு சர்வ கட்சிக் குழு தெரிவு செய்யப்பட்டு பல மாதங்களாகிவிட்டது. ஆனல் இதுவரை இக் குழுவினர் பலதடவை சந்தித்து வேலைத் திட்டங்கள் நிறைவேற்றியும் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை என்பது நாமறிந்ததே. இந்த சர்வகட்சிக் குழு தீண்டாமைப் பிரச்னையை ஒழிப்பதுபற்றி எடுக்கும் பகீரதப் பிரயத்தனங்களைப் பார்க்கும்போது இமயமலை வயிறுநொந்து சுண்டெலி பெற்றது போல வெறும் கடுதாசித் திட்டம் உருவாகியதே கண்ட பலனுகும்.

மொழிப் பிரச்னை குறித்து நேரடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென வாதிக்கும் நாம் தீண்டாமைக் கொடுமைகளைத் தீர்க்கத் தயங்குவது ஏன்? சிங்கள மொழி வெறியர்கள் தமிழ்பேசும் மக்களைப் பார்த்து மொழிப் பிரச்னை தீர்ந்துவிட்டது எனக் கூறுகின்றனர். இதனைப் பின்பற்றி நம் மத்தியில் உள்ள சாதி வெறியர்கள் தீண்டாமைப் பிரச்னை தமிழ் மக்கள் மத்தியில் இல்லை எனக் கையை விரிக்கின்றனர். தீண்டாமைப் பிரச்னை என்பது முள்ளின்மேல் போட்ட துணி என்றும் அதுமெதுமெதுவாகக் கழற்றப்பட வேண்டுமென்றும் தமிழ் தலைவர்கள் கூறுகின்றனர். இதே விதமாகத்தான் இனப் பிரச்சனையையும் நம் தலைவர்கள் கவனிக்கின்றனர்.

அமெரிக்க மிஷனரிமார் நமது நாட்டுக்குச் செய்துவந்த சேவை போதும். இனி அவர்கள் தமது தாய்நாடுகளுக்குச் சென்று அந்நாட்டில் பொதுப் பணியில் ஈடுபடுவது மிகவும் நல்லது.

திருவாளர்கள் டொமினிக் ஜீவா, எஸ். துரைசிங்கம் ஆகியோரும் பேசினர்.

## கொல்வின் வருகிருர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கைச் சமசமாஜக் கட்சிப் பிரமுகரும் தெஹிவளை-கல்கிசை எம். பி.யுமான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா வருகிற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வரவிருக்கிருர். வடபகுதியில் உள்ள சமசமாஜ வாலிபர் சங்கங்களின் வேலைத் திட்டங்களைப் பார்வையிடும் முகமாகவே கொல்வின் ஆர். டி. சில்வா யாழ்ப்பாணம் வருகிருர். அன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கஸ்தூரியார் சன்துறை வீதியில் உள்ள சமசமாஜக் கட்சிக் காரியாலயத்தில் வாலிபர் சங்கப் பிரதிநிதிகள் மத்தியில் சொற்பொழிவு நிகழ்த்துவார் என்று தெரிகிறது.

## இன்று பார்லிமெண்ட் கூடுகிறது

கொழும்பு, திங்கள்

நாளை பிற்பகல் 2 மணிக்கு ஜனப்பிரதிநிதிகள்சபை கூடும்பொழுது நிதிமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லை 1961-ம் ஆண்டு இயற்றப்பட்ட 65-ம் இலக்க நிதிச்சட்டத்திற்கான திருத்த மசோதாவைச் சமர்ப்பிப்பார்.

தேசிய அபிவிருத்தி வரி, அரிசி மான்யவரி, தொழில் செய்வதற்குப் பதிவு செய்வதற்காகப் பணம் கட்டுவது போன்றவற்றை அகற்றுவதற்காகவே முக்கியமாகத் திருத்த மசோதா சமர்ப்பிக்கப்படுவதாக நிதிமந்திரி தெரிவித்தார்.

### மணி வாசகம்

எல்லாக் கலைகளையும் விட வாழ்க்கை பெரிது. யாருடைய வாழ்க்கை பரி பூரணத்தை நெருங்கிவிட்டதோ, அவரே மிகப் பெரிய கலைஞன் என்றும் கூறுவேன். உயரிய வாழ்க்கையின் அடிப்படையும் கட்டுக்கோப்புமில்லாவிடில் கலைகளால் என்ன பயன்?

— மகாத்மா காந்தி

ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 6 உ (19-3-63)

## கிராம சேவகர்கள்

கிராமசேவகர்கள் தங்களைப் பொதுமக்களின் ஊழியர்களாகவே கருதி சேவை செய்ய வேண்டுமென்றும், அரசாங்க அதிகாரிகள் அனைவருமே சேவையாளர்களாகக் கருதப்பட வேண்டுமென்றும், யாழ்ப்பாண அரசாங்க அதிபர், கிராமசேவகர்களின் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைக்கையில் சரியாக வற்புறுத்தினர்.

பழைய காலனி ஆட்சியிலே கிராமத் தலைவர்கள் மட்டுமன்றி, பல அரசாங்க அதிகாரிகளும் தங்களை "குட்டிமன்னர்கள்" என்று நினைத்துக் கொண்டு, பிரிட்டிஷ் ஆட்சியின் பிரதிநிதிகளாகப்பொது மக்கள்மீது ஆட்சி அதிகாரம் செலுத்திவந்தனர். நாடு சுதந்திரம் பெற்றபின், 'கிராமத் தலைவர்கள்' என்ற பெயர் 'கிராமசேவகர்'களாக மாற்றப்பட்டதன் நோக்கமே அவர்கள் தங்களைக் கிராமத்தின் 'குட்டிமன்னர்' என்று நினைக்காமல் மக்களின் ஊழியர் என்பதை அவர்களுக்கு அறிவுறுத்தத்தான். இதே எண்ணம் எல்லா அரசாங்க அதிகாரிகளிடையேயும் ஏற்படவேண்டியது மிக அவசியம். ஆனால்துரதிருஷ்டவசமாக, அதிகாரிகளில் பலரிடையே இன்னும் இந்த மனமாறுதல் ஏற்படவில்லை.

அது ஒருபுறமிருக்க, புதிதாக கிராம சேவகர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு பல பல அதிகாரிகளும் பயிற்சியும் நல்ல உபதேசங்களும் செய்து வருவதாகத் தெரிகிறது. வருகிற மேமாதம் கிராமசேவகர்கள் தங்கள் கடமையை ஆரம்பிக்கையில், இருமுக்கிய விஷயங்களை அவர்கள் மறக்கப்படாதென்று ஓர் அதிகாரி வற்புறுத்தியுள்ளார். ஒன்று மதுபானம் அருந்தப்படாது, மற்றது கைலஞ்சம் வாங்கப்படாதென்பதுதான். மதுபானப் பழக்கம் ஏற்பட்டு, மது அரக்கனுக்கு ஒருவர் அடிமைப்பட்டுவிட்டால் புத்திநிதானம் இழந்து, அதனால் பேச்சும், நடத்தையும் தவறிக் கெட்டு, வேலை இழப்பது மட்டுமன்றி வாழ்க்கையே குட்டிச்சுவராகிவிடுவதைப் பார்க்கிறோம். கைலஞ்சம் வாங்கினால் இந்த ஜனநாயக காலத்தில் அது எப்படியும் அம்பலமாகிவிடும். ஆகவே இவ்விரு விஷயங்களிலும் கிராமசேவகர்கள மட்டுமன்றி, அரசாங்க ஊழியரும் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதாயின் தங்கள் மதிப்பைத் தாங்களே உயர்த்திக் கொள்வதுடன் நிர்வாகமும் திறம்பட நடைபெற உதவுபவராவர்.

கொழும்பிலே நேற்றும் இன்றும் பல அரசாங்க ஏஜண்டுகளின் விசேஷ மகாநாடு ஒன்று நடைபெறுகிறது. உள்நாட்டுமந்திரியும் நிதிமந்திரியும் இம்மகாநாட்டில் கலந்து கொண்டு, கிராமசேவகர்கள் உள்ளிட்டு பல முக்கிய விஷயங்களைப் பற்றிப் பேசுகின்றார்களாம். மந்திரிகள் ஒரு விஷயத்தில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். கிராம சேவகர்களைத் தங்களது அரசியல்கட்சி நலனுக்காகப்பயன்படுத்தப்படாது. கட்சிப்போட்டிகள் அதிகரித்துள்ள காலமிது. கிராமசேவகர்களைத் தங்கள் கட்சி நலனுக்காக அரசாங்கக் கட்சி பயன்படுத்துமாயின், கிராமசேவர்கள் பொதுமக்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் இழந்து இந்த ஏற்பாடும்பாழாகும்.

கிராமசேவகர்களாக நியமனம் பெற்றவர்கள் அதிர்ஷ்டசாலிகள். சம்பளம், வேலைஸ்திரம் ஒருபுறமிருக்க, பொதுமக்களுக்கு நல்ல சேவை செய்யக்கூடிய வாய்ப்பு அவர்களுக்குக்கிடைத்துள்ளது. புதிதாகக் கடமை ஏற்கும்போது அனுபவமின்மை காரணமாக அவர்களுக்கு ஒருவித அச்சமும் தயக்கமும் ஏற்படக்கூடும். என்றாலும் விருப்பு வெறுப்பின்றி, பொதுமக்களின் ஊழியர் என்பதை மறக்காமல் அவர்கள் தங்கள் கடமையைப் பயபக்தியுடன் செய்ய முற்பட்டால் அவர்கள் தங்கள் கடமையை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். கிராமத்திலே குற்றங்கள் குறையவும் மக்கள் சுபிட்சமாகக் குறையின்றி வாழவும் செய்ய புதிய கிராமசேவகர்களுக்கு நல்ல பல வாய்ப்புகள் உண்டு. தங்கள் சுயநலனைவிட கிராமத்தின் நலனையே மேலாகக்கருதி, தியாகபுத்தியுடன் எந்தக் கிராமசேவகர் தொண்டு புரிகின்றாரோ அவர்கள் வெற்றி பெறுவது திண்ணம். அந்தக கிராமமும் சுபிட்சமாக வளரமுடியும்.

---

## அரசாங்க எம். பி.க்கள் கூடுகின்றனர்

கொழும்பு, திங்கள்

பல முக்கிய பிரச்னைகள்பற்றி ஆராய்வதற்காக நாளை அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக் கூடுகிறது.

புதிய நிர்வாக சேவையை மே மாதத்தில் ஸ்தாபிக்க வேண்டுமென்று பண்டாரவளை எம். பி. திரு. குணசேகராவும் எண்ணை சம்பந்தமான பிரச்னை பற்றி முற்றிலும் ஆராயவேண்டுமென்று மாவனல்ல எம். பி. திரு. ரத்னயக்காவும், எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தும் வேலையற்றிருப்போருக்கு வேலை வசதியளிக்க ஒரு திட்டம் வகுக்கவேண்டுமென்று பெந்தர-எல்பிட்டிய எம். பி. திரு. காரியவாசமும் நாளை தீர்மானம் கொண்டுவர விருக்கிறார்கள் இவற்றைவிட நாளைய கூட்டத்தில் கூப்பன் புத்தகங்களை வாபஸ் வாங்குவது பற்றியும் வாபஸ் வாங்குவதை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது பற்றியும் நாட்டின் தற்போதைய நிலைமைபற்றி திறைசேரி அறிவித்துள்ளது பற்றியும் ஆராயப்படும்.

# யாழ்ப்பாணத்தில் இராமகிருஷ்ண மிஷன் கிளை நிறுவ முயற்சி

## விவேகானந்தர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட ஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ்வாய்

சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவை யாழ்ப்பாணப் பகுதியில் செவ்வனே நடத்துவதுபற்றி ஆலோசிப்பதற்கான கூட்டம் வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்தில் நடைபெற்றது. வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் தலைமையில் இக்கூட்டம் நிகழ்ந்தது.

தலைவர் தமது முன்னுரையில்' 'அரசாங்கம், மிஷன் பாடசாலைகளை எடுத்தமையினால் யாழ்ப்பாணத்தில் இராமகிருஷ்ண மிஷன் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தவேண்டுமென'க்கூறினார். சுவாமி பிரேமாத்மானந்தா, கொழும்பிற் கூடிய நூற்றாண்டுவிழாச் சபை செய்த தீர்மானங்களை எடுத்துக் கூறினார். வெள்ளவத்தையில் மிஷன் கட்டிடத்திற்கு முன்பாக பெரும் மண்டபத்தைக் கட்டுவதென்றும் இலங்கையின் பல பாகங்களிலும் விழாவைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்வதெனவும் அச்சபை தீர்மானித்திருப்பதாக மேலும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் மிஷன் கிளை ஸ்தாபிப்பதுபற்றிக் கல்கத்தாவில் உள்ள தலைமைக் காரியாலயமே முடிவுசெய்ய வேண்டும் என்றும் யாழ்ப்பாணத்து மக்கள் போதிய காரணங்களைக்காட்டி மனுச்செய்தால் தலைமைக் காரியாலயம் இதற்கு இசையக்கூடுமெனவும் அவர் தெரிவித்தார்.

கூட்டத்திற் சமுகமாயிருந்த மத்திய கல்லூரி அதிபர் திரு. ஏ. ஈ. தம்பர், முன்னாள் உதவி மாகாண அதிபர் திரு. ஆ. தெட்சணாமூர்த்தி, வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் ஆகியோர் சில ஆலோசனைகள் கூறினர்.

ஈற்றில் கல்கத்தா தலைமைக் காரியாலயத்திற்கு கிளை ஸ்தாபிப்பதுபற்றி ஒரு வேண்டுகோளவிடுப்பதென்றும் யாழ்ப்பாணத்தின் பல்வேறிடங்களில் விவேகானந்தர் நூற்றாண்டு விழாவை நடத்த ஏற்பாடுகள் செய்வதெனவும், முக்கியமான விழாவை, சுவாமிகள் யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்தபோது உரை நிகழ்த்திய இந்துக் கல்லூரியில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. விழாவை நடத்துவதற்குப் பின்வருவோரைக் கொண்ட செயற்குழு நிறுவப்பட்டது.

தலைவர்: டாக்டர் எஸ். சுப்பிரமணியம்; உபதலைவர்கள்: டாக்டர் வி. டி. பசுபதி, உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம், முதலியார் சி. முத்துத்தம்பி; இணைக் காரியதரிசிகள்: திரு. ச. அம்பிகைபாகன், திரு க. சதாசிவம்; தனாதிகாரி: திரு. கா. வைரமுத்து; உதவித் தனாதிகாரி: திரு. எஸ். செல்வராசா.

---

# "மரவரிமுறை நீடிக்க வேண்டும்"

## வ. இ. க. இதொழிலாளர்சங்கம் அரசாங்கத்துக்குவேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங்கள்

மரவரி முறையால், ஒடுக்கப்பட்ட எமது சமூகம் முன்னேற்றமடைவதால் மரவரி முறை தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று இச்சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது என்று கோரும் ஓர் தீர்மானம், வட இலங்கை கள்ளிறக்கும் தொழிலாளர் சங்க மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

வட இலங்கைக் கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தின் முப்பத்துமூன்றாவது மகாநாடு நேற்றுக்காலை வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. வ. இ. க. இ. தொ. சங்கத்தின் மகாநாடு சங்கத் தலைவர் திரு. எஸ். ஆர். ஜேக்கப் ஜே. பி தலைமையில், அமரர் பொன். கந்தையா படத் திறப்புவிழா அஞ்சலியுடன் ஆரம்பமானது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:

"மரவரி முறையில் பொலிஸார் தலையிடுவதை ரத்துச் செய்யவேண்டுமென்று பிரதம மந்திரியையும், உள்நாட்டமைச்சரையும் கேட்டுக்கொள்வது. சங்கத்தின் பொது நிர்வாக சபைகுத் தொழிலாளர் அதிகம் பேரைச் சேர்ப்பது. கலால் இலாகாவின் கைலஞ்சத்தை எதிர்த்து ஒரு கமிஷன் முன்னர் சாட்சியமளிக்க ஒழுங்குகள் மேற்கொள்வது."

இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ப ஜீவானந்தம், திரு. ராஜலிங்கம் மறைவு குறித்து அனுதாபமும் தெரிவிக்கப்பட்டது.

லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. பாலசிங்சிங்கம், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. வ. பொன்னம்பலம், திரு. சி. நடராசா, நகரசுத்தித் தொழிலாளர் சங்கப் பிரதிநிதி திரு. எஸ். எஸ். கபிரியல்பிள்ளை, திரு. செல்லையா, அ. இ. சி. த. மகாசபை பொதுச் செயலாளர் திரு. ஈ. ஈ. செல்வரத்தினம், திரு. கே. பசுபதி, வடபகுதி கூட்டுறவுப் பகுதி உதவி ஆணையாளர்கள் ஆகியோர் கூட்டத்துக்குச் சமுகம் கொடுத்து சொற்பொழிவாற்றினர்கள்.

புதுவருட நிர்வாகசபையும் தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர்: திரு. எஸ். ஆர். ஜேக்கப், உபதலைவர்கள்: திருவாளர்கள் தவசிப்பிள்ளை, கபிரியப்பிள்ளை, மு. ஆறுமுகம், மு. வைத்திலிங்கம், கே. பூவிலிங்கம், பொதுக் காரியதரிசி: திரு. எம். ஸி. சுப்பிரமணியம், நிர்வாகக்காரியதரிசி: திரு. ச. இராசையா. தனாதிகாரி: திரு. குழந்தையன்.

மகாநாட்டின் முடிவில் சங்கத் தலைவர் திரு. ஜேக்கப்புக்கு கதராடை போர்த்திப் பொன்முடிப்பு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

---

### ஐயாறன் எழுதுவது

சுன்னாகத்திலே இனி பயிர் பச்சைகளும், மரஞ்செடிகளும், மிகச் செழிப்பாக வளருமென்றார் ஓர் அன்பர். ஏன் தெரியுமா?

அங்கு ஸ்ரீ ராமநாதன் இசைக் கல்லூரியின் ஆதரவிலே நான்கு நாட்களாக ஸ்ரீ தியாகராஜ சங்கீத உற்சவம் நடந்ததல்லவா? அவ்விழாவில் உயரிய இசை மாரி பொழிந்ததாலும், இசையால் பயிர்கள் நன்கு வளருமென்று கூறப்படுவதாலும், அன்பர் அப்படி உற்சாகத்துடன் கூறினார். அங்கு கேட்ட சங்கீதம், வயோதிபர்களையும் உற்சாகப்படுத்தி வாலிபர்களாக்கிவிடக் கூடியதென்றார் மற்றொரு பெரியார்.

கடைசி நாள் மட்டுமே சென்றேன். சென்ற இடத்தில் இப்படிப் பலரும் கூறியதும், மற்ற மூன்று நாளும் எனக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக்குறித்து வருந்தினேன்.

* * *

விழா நடந்தது கல்லூரியின் முன்புறத்திலே. எதிரே பந்தல். அங்கு ஸ்ரீ தியாகராஜ சுவாமி வீற்றிருந்து, விழாவுக்குத்தலைமைதாங்கி எல்லாவற்றையும் கண்டு இன்புற்று, பல இளம் கலைஞர்களையும், கலா ரஸிகர்களையும் ஆசீர்வதித்தார்.

ஆண்களைவிட பெண்கள் கூட்டமே அதிகம். விதவிதமான உடைகள் உடுத்தி, புதுமைப் பெண்கள் அந்த விழாவை அழகுபடுத்தினர். இன்னிசையைப் பருகி, மென்மையான கரங்களால் அவ்வப்போது கரகோஷம்செய்து கலைஞர்களை உற்சாகமூட்டிப் பாராட்டினர். சுற்றி மரங்களிலே மின்சார வண்ண விளக்குகள் அந்த இடத்தை ஜோதிமயமாக்கின. செவிகள், கண்கள், உள்ளம் இவற்றுக்கெல்லாம் நல்விருந்து. ஏதோ பிருந்தாவனத்தில் இருப்பதுபோல் தோன்றியது! உடன் வள்ளல் ராமநாத துரை செய்த பெரிய புண்ணியத்தைப்பற்றியே என் மனம் நன்றியுடன் நினைத்து வாழ்த்தியது.

* * *

முதலில் சில மாணவிகள் மேடைமீதேறி, ஸ்ரீ தியாகராஜரின் கீர்த்தனைகள் இரண்டொன்றைப் பாடி, அவருக்குத் தங்கள் இசைக் காணிக்கையைச் செலுத்தினர். தெரியாத மொழியாயினும், அந்த இசையைப் பயின்று பாட எவ்வளவு சாதகம் செய்திருக்கவேண்டும்! இதில்தான் அவர்களுக்கு எத்தனை ஆர்வம். சில மாணவிகள் பாடியது, முதல் நம்பராக இருந்தது. இசைச் செல்வம் இங்கு நம் பெண்கள்மூலம் நன்கு வளர்ந்துவருவதைக் கண்டேன்.

இவர்களில் சிலரைத்தெரிவு செய்து, சென்னையிலே சங்கீத ஸீஸனுக்கு அழைத்துச்சென்று மேடை ஏற்றி, ஈழத்துக் கலைச் செல்வத்தைக் காட்டவேண்டுமென்றார் ஓர் அன்பர். ஆனால் நம் காருண்ய அரசாங்கம்...!

* * *

தம் துணைவியார் பின்னிருந்து அழகாக தம்புரா மீட்டி உற்சாகமளித்து ரஸிக்க சத்தியலிங்கத்தார் முதலில் மெதுவாக பிரார்த்தனை செய்து கணீர் என்ற குரலில் பாடி சபையில் புதிய கலகலப்பு ஏற்படுத்தினர். இவர் பாட, அவர் ஆடப் பார்த்திருக்கிறேன். அன்று துணைவியார் சுருதியாகவும் இவர் இசையாகவும் இழைந்த காட்சி அபூர்வம், தமிழகத்திலும் இப்படிக் கண்டதில்லை.

புருஷன் மனைவி இருவரும் சேர்ந்து பாடினால் அந்த இரட்டைக்குரல் எவ்வளவு இனிமையாக இருக்கும்!

சித்தூராரின் சீடர் ஐயாக்கண்ணு தேசிகரின் கம்பீரமும் இனிமையும் கலந்த இசை ஒரு மணிநேரத்துக்கு மேல் பொழிந்தது. நிரவலும் ஸ்வரபிரஸ

(8-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி அசைஸ்விசாரணை

# 'கம்பியால் பிடரியில் அடிக்க மயங்கி விழுந்தேன்'

## மல்லாகம் கொலைவழக்கில் சாட்சியம்

### ஜீ. ஜீ. யின் குறுக்கு விசாரணை

யாழ்ப்பாணம், செவ்

மல்லாகம் கொலைவழக்கு நேற்று வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிகளின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தார். ஜீ. ஜீ.யின் குறுக்கு விசாரணையைப் பார்ப்பதற்காகப் பெருந்திரளான மக்கள் நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்தனர்.

1961-ம் ஆண்டு ஆவணி மாதம் 12-ம் திகதி மல்லாகம் சந்திக்கருகே சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும் தம்பிப்பிள்ளை கந்தையாவை கொலைசெய்ததாகவும் தம்பிப்பிள்ளை கனகரத்தினத்தை கத்தியால் வெட்டிப் படுகாயமுண்டுபண்ணியதாகவும், தம்பிப்பிள்ளை நடராசாவிற்கு காயம் விளைவித்ததாகவும், சின்னக்குட்டி சின்னவனுக்கு காயம் விளைவித்ததாகவும், தம்பிப்பிள்ளை கனகரத்தினத்திற்கு சொந்தமான காரை சேதப்படுத்தியதாகவும், இராமலிங்கம் கனகரத்தினம் இராமலிங்கம் சிவஞானம், செல்லையா இரத்தினம், துரையப்பா ஞானசேகரம், செல்லையா ராசதுரை ஆகியோர் மீது இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகளின் சார்பில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், திருவாளர்கள் டி. கணேசலிங்கம், ஆர். ஆர். நல்லையா, எஸ்.எம். சுந்தரலிங்கம் ஆகியோரின் உதவியுடன் திருவாளர்கள் எஸ். செல்லத்துரை, ரீ. தம்பிரத்தினம் ஆகியோரின் அனுசாரணையுடனும் ஆஜரானர்.

எதிரிகளுக்காக அரசாங்கத்தால் திரு. வி. நடராசா நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் திரு. வேக்லி போல் ஆஜரானர்.

அரசாங்க ரசாயன பரிசோதகர் திரு. ஜீ. ஏ. சி. சிறிமானே சாட்சியமளித்தார்.

தம்பிப்பிள்ளை கனகரத்தினம் சாட்சியமளித்த போது கூறியதாவது:-

1961-ம் ஆண்டு ஆவணி 12-ம் திகதி மத்தியானம் 12 மணிக்கு மல்லாகத்திலுள்ள எனது கராசுக்கு போனேன் அன்றுகாலை ஒன்றும் நடக்கவில்லை. இறந்தவராகிய கந்தையாவை சந்தித்தேன். இறந்தவர் சின்னத்தம்பியுடனும் மற்றவர்களுடனும் ஆட்டைப்பங்கு போட்டுகொண்டிருந்தார். ஆடு 32 பங்காகப் பிரிக்கப்பட்டது. 16 பங்கு சின்னத்தம்பிக்கும், 16 பங்கு கந்தையாவிற்கும் மற்றவர்களுக்கும். சின்னத்தம்பியின் பங்கை கட்டிக் கொடுக்கும்படி நான் சொன்னேன். ஞானசேகரம் மூன்று பங்கு கேட்டார். அப்பொழுது கந்தையா, சின்னத்தம்பியிடம் வாங்க சொன்னர். சின்னத்தம்பியிடம் வாங்க முடியாது எனக்கு நீ தரவேண்டுமென்றர். பின்பு கந்தையாவின் முகத்தில் அடித்தார். நான் ஞானசேகரத்தை கேட்டபோது, தான் மூன்றுபங்கு கேட்டதாகவும், தரவில்லையென்றும் சொன்னர். நான் சமாதானப்படுத்தி, சின்னத்தம்பியிடம் மூன்று பங்கு வாங்கி கந்தனிடம் கொடுத்தேன்-கந்தன் ஞானசேகரத்துடன் வந்தவர். பெட்ரோல் நிலையத்திற்கு சென்று ஞானசேகரம் பேசினர். கந்தையாவும் மற்றும் ஆட்களும் சண்டை பிடிக்க போனபோது நான் தடுத்தேன். 4-ம் எதிரியின் தகப்பன் துரையப்பாவிடம் 4-ம் எதிரியை கூட்டிப் போகும்படி சொன்னேன். 4-ம் எதிரியிடம் சண்டை பிடிக்க வேண்டாமென்றேன். 4-ம் எதிரி போக மறுத்தார்.

மத்தியானம் 1 மணிக்கு சுன்னைகம் விதானையாரின் செத்தவீட்டிற்கு போனேன். அதன் பின் உடுவிலுக்கு சென்று பள்ளிக்கூடபிள்ளைகளை ஏற்றி வந்தேன்.

பின்னேரம் 3 மணிக்கு மல்லாகம்சந்திக்கு வந்தபோது மணியத்தின் கடைக்கு முன்னுல் கூட்டமாக ஆட்கள் நின்றர்கள். எனது கராச்சுக்கு எதிரில் தான் மணியம் கடை. நான் காரை கராச்சுக்குள் கொண்டுவந்தபோது. 2 வது எதிரி இரும்புக்கம்பியால் காருக்கு அடித்தார். நான் இறங்கி 'ஏன் அடித்தாய் என்று கேட்டவுடன் எனக்கும் இரும்பு கம்பியால் பிடரியில் அடித்தார். நான் மயங்கி காருக்குப்பின்னுல் விழுந்தேன். அதன் பின்நடந்தது தெரியாது. ஆறு நாட்களுக்குப் பின் ஆஸ்பத்திரியில் அறிவு வந்தது. முதலாம் எதிரிக்குப் பின்னுல் வந்த இரண்டாம் எதிரி கையில் கோடரியும், மூன்றும் எதிரி கருங்காலிக் கொட்டனும், நான்காவது எதிரி கிறிஸ் கத்தியும், ஐந்தாவது எதிரி இரும்புக் கம்பியும் வைத்திருந்தார்கள்.

எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்:-

ஜீ. ஜீ: யாருடைய கையிலாவது துப்பாக்கியைக் கண்டீரா?

சாட்சி: இல்லை.

ஜீ. ஜீ: வெடிச்சத்தம் கேட்டதா?

சாட்சி: இல்லை.

ஜீ. ஜீ: சிவபாதசுந்தரம் சுடப்பட்டு இறந்தது தெரியுமா?

சாட்சி: அறிவுவந்தபின் தெரியும்.

ஜீ ஜீ: உடைந்த கதிரையில் எப்படி இரத்தம் வந்ததென்று தெரியுமா?

சாட்சி: தெரியாது.

ஜீ. ஜீ ஆஸ்பத்திரியில் நடராசாவை என்ன கேட்டீர்?

சாட்சி: நடந்த சம்பவத்தைப்பற்றி.

ஜீ. ஜீ. கதிரையைப்பற்றிக் கேட்டீரா?

சாட்சி: இல்லை.

ஜீ. ஜீ: அடுத்தநாள் நீதிபதி விசாரணையின் போது நின்றீரா?

சாட்சி: இல்லை.

ஜீ ஜீ: அடுத்தநாள் காலை வாய் முறைப்பாடு கொடுத்தீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

ஜீ. ஜீ: பொலிஸ கான்ஸ்டபிள் புகாரியைத் தெரியுமா?

சாட்சி: தெரியாது.

ஜீ. ஜீ: 13-ம் திகதி காலை கான்ஸ்டபிளுக்கு வாய்முறைப்பாடு கொடுத்தீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

ஜீ ஜீ: வாய்முறைப்பாடு வாசித்து விளங்கப்படுத்தினரா?

சாட்சி: ஞாபகமில்லை.

ஜீ. ஜீ இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு வாய் முறைப்பாடு கொடுத்தீரா?

சாட்சி: ஆம்.

ஜீ. ஜீ: வாக்குமூலத்தில், நான் திரும்பிப்பார்த்தபோது கனகரத்தினம் இருப்புக் கம்பியுடன் நின்றர் என்றீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

ஜீ. ஜீ: கராஜில் காரை விட்டு இறங்கினேன் என்றீரா?

சாட்சி: நான் சொல்லவில்லை.

ஜீ. ஜீ: உடனே தலையில் அடிவிழுந்தது என்றீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

ஜீ. ஜீ: பக்கத்தில் துரையப்பாவையும் கண்டேன் என்றீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

ஜீ. ஜீ: உமது பக்கத்தில் துரையப்பாவைக் கண்டீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

ஜீ. ஜீ மகனைக் கண்டீரா?

சாட்சி: ஓடிவந்ததைக் கண்டேன்.

ஜீ. ஜீ: துரையப்பாவுடன் பெயர் தெரியாத ஒருவரும் வந்தாரா?

சாட்சி: பெயர் தெரிந்தவர்கள் தான் வந்தார்கள்.

ஜீ ஜீ: வாக்குமூலத்தில், என் பக்கத்தில் துரையப்பாவுடன் பெயர் தெரியாத ஒருவரையும் கண்டேன் என்றீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

ஜீ. ஜீ: முதல் அடிக்கு உடனே விழுந்ததாக சொன்னீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

ஜீ. ஜீ: அப்படியிருந்தால் சரியா?

சாட்சி: சரியில்லை.

ஜீ. ஜீ: வாக்குமூலத்தில் பொல்லாலும் கையாலும் எல்லோரும் அடித்ததாகச் சொன்னீரா?

சாட்சி: நான் சொல்லவில்லை.

ஜீ. ஜீ: அப்படியென்றல் சரியா?

சாட்சி: சரியில்லை.

ஜீ. ஜீ: அதன் பின் அறிவில்லாமல் விழுந்ததென்றீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

ஜீ. ஜீ: அப்படி எழுதப்பட்டது சரியா?

சாட்சி: இல்லை.

ஜீ. ஜீ: அடுத்தநாள், இப்பதான் அறிவு வந்ததென்று கான்ஸ்டபிள் புகாரியிடம் கூறினீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

ஜீ. ஜீ: அடுத்த நாள் அறிவு வந்ததா?

சாட்சி: அறிவு வந்ததாக ஞாபகமில்லை.

ஜீ. ஜீ: நீர் குடிக்கிறனீரா? சம்பவம் நடந்தன்று குடித்தீரா?

சாட்சி: ஆம். பள்ளிப்பிள்ளைகளைக் கூட்டிவந்தபின் குடித்தேன்.

ஜீ. ஜீ: காரில் வந்தபோது நீர் துப்பாக்கி கொண்டுவந்திரா?

சாட்சி: ஒரு வருஷத்திற்கு துப்பாக்கியைக் கையால் தொடவில்லை.

ஜீ. ஜீ: இதிலிருந்து 1 வருடம் தொடவில்லையென்றல், சம்பவம் நடந்தன்று தொட்டிருப்பீர் தானே?

சாட்சி: சம்பவம் நடந்தநாள் வரை ஒரு வருட காலததிற்கு.

ஜீ. ஜீ: இன்ஸ்பெக்டர் ஜெபமாலையிடம் வாக்குமூலத்தில் 2-ம் எதிரி கையில் கோடரி வைத்திருந்தார் என்றீரா?

சாட்சி: ஆம்.

ஜீ. ஜீ: அவர் உமது வாக்குமூலத்தை வாசித்து விளங்கப்படுத்தினரா?

சாட்சி: ஆம்.

ஜீ. ஜீ: 2-ம் எதிரி கோடரி வைத்திருந்ததாகவாசித்தாரா?

சாட்சி: ஆம்.

ஜீ. ஜீ: வாக்குமூலத்தில் 2-ம் எதிரி கையில் ஆயுதம் கொண்டுவந்ததாக நீர் சொல்லவில்லை?

சாட்சி: நான் சொன்னேன்.

ஜீ. ஜீ: இன்று மூன்றும் எதிரி கையில் பொல்லு இருந்ததாகச் சொன்னீர்?

சாட்சி: ஆம்.

ஜீ. ஜீ: பொலிஸ் வாக்குமூலத்திலும் சொன்னீரா?

சாட்சி: ஆம்.

ஜீ. ஜீ: பொலிஸ் வாக்குமூலத்தில் 3-வது எதிரி கத்தி கொண்டுவந்ததாக சொன்னீர்?

சாட்சி: இல்லை.

ஜீ. ஜீ: 4-ம் எதிரி கையில் கத்தி இருந்ததாக இன்று சொன்னீர்?

சாட்சி: ஆம்.

ஜீ. ஜீ: பொலிஸிலும் அப்படி சொல்லியிருக்கிறீர்?

சாட்சி: ஆம்.

ஜீ. ஜீ: 4-ம் எதிரி பொல்லு வைத்திருந்ததாகப் பொலிஸ் வாக்குமூலத்தில் கூறியிருக்கிறீர். 5-ம் எதிரி கையில் இரும்புக்கம்பி வைத்திருந்ததாகச் சொன்னீர்.

சாட்கி: ஆம்.

ஜீ. ஜீ: பொலிசுக்கும் அப்படிச் சொன்னீரா?

சாட்சி: ஆம்.

ஜீ. ஜீ பொலிஸ் வாக்குமூலத்தில் 5-வது எதிரி கோடரி வைத்திருந்தார் என்று கூறியிருக்கின்றீர்.

சாட்சி: இல்லை.

ஜீ. ஜீ: அப்படியென்றல் பொய்யாயிருக்கும்.

சாட்சி: ஆம்.

ஜீ. ஜீ: சின்னட்டி சின்னவன் ஆட்டு இறைச்சி பங்கு போட்ட போது நின்றரா?

சாட்சி: இல்லை.

ஜீ.ஜீ: பங்கு போடும்போது கந்தையாவிற்கு சின்னவன் உதவியாக இருந்தார்?

சாட்சி: நான் காணவில்லை.

ஜூரி: எந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து பிள்ளைகளைக் கொண்டு வந்தீர்?

சாட்சி: உடுவில் பெண்பாடசாலையிலிருந்து.

ஜூரி: அன்று பள்ளிக்கூடம் நடந்ததா?

சாட்சி: இல்லை. போர்டிங்கிலிருந்து கூட்டி வந்தேன்.

நீதியரசர்: அன்று சனிக்கிழமை.

சாட்சி: ஆம்.

ஜூரி: காரை வழக்கமாய் எப்படி விடுகிறனீர்?

சாட்சி: பின்கார் பின்பக்கம் நிற்கும்படி!

தம்பிப்பிள்ளை நடராசாவும் சாட்சியமளித்தார். இன்று காலைவரை விசாரணை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

# சீன - சோவியத் தலைவர்கள் சந்திப்பு

## கியூபா பிரதமர் வரவேற்பு

ஹவானு, மார்ச் 18

சீன - சோவியத் அதிகாரிகளின் சந்திப்பை, கியூபா பிரதமர் டாக்டர் பிடல் காஸ்டிரோ வரவேற்றிருக்கிறர்.

சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சோவியத் கயூனிஸ்ட் கட்சிக்குமிடையே ஏற்பட்டிருக்கும் கருத்து வேற்றுமைகளை நீக்கும் பொருட்டு, சோவியத் தலைவர்களும், சீனத் தலைவர்களும் நடத்தவிருக்கும் பேச்சு வார்த்தைகளைத் தாம் வரவேற்பதாக கியூபா பிரதமர் டாக்டர் பிடல் காஸ்டிரோ தெரிவித்துள்ளார்.

சீனத் தலைவர்கள் - சோவியத் தலைவர்கள் சந்திப்பினல்' சோஷலிஸ்ட் சமுதாயம் பயன் பெறும் என்றும், கட்சிகளுக்கிடையே நிலவும் கருத்து வேற்றுமைகளை நீக்குவதற்கு இரண்டு நாட்டுத் தலைவர்களும் நடத்தவிருக்கும் சந்திப்பைத் தாம் வரவேற்பதாகவும் கியூபா பிரதமர் தெரிவித்துள்ளார்.

லத்தீன் அமெரிக்கர்களுக்கு, அமெரிக்க நாடுகளினுல் பெரும் அபாயம் ஏற்பட்டிருக்கிறதென்றும் இந்த விஷயம் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியதொன்றுதம் என்றும் டாக்டர் பிடல் காஸ்டிரோ கூறினர்.

# வண்டியுடன் ரயில்என்ஜின் மோதி ஒருமாடு மரணம்

## வண்டிக்காரருக்கு கால்முறிவு

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சியில் ஒரு மாட்டு வண்டியின் மீது ரயில் என்ஜின் ஒன்று மோதியதால் வண்டியைச் செலுத்திவந்த கணபதி சடையன் என்பவரின் ஒருகால் முறிந்ததுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

கிளிநொச்சி ஐந்தாம் வாய்க்காலைச் சேர்ந்த கணபதி சடையன் தனது வண்டியில் நெல் மூடைகளை ஏற்றிக்கொண்டு சென்றபொழுது, கரடிப்போக்கு ரயில்வேக் கடவையில் பழையிலிருந்து கிளிநொச்சிக்குச் சென்றுகொண்டிருந்த ரயில் என்ஜின் வண்டியின் பின்புறத்தில் மோதியது.

பாதுகாப்பற்ற இந்த ரயில்வேக் கடவையை வண்டி கடந்துகொண்டிருந்த சமயத்தில் என்ஜினும் அங்கு வந்தது. என்ஜின் சாரதி என்ஜினை நிறுத்தமுடியாது போய்விட்டது. வண்டி சுக்கல் சுக்கலாக நொருங்கிவிட்டது. நெல்மூடைகள் சிதறிவிழுந்தன. சடையன் தூக்கி வீசப்பட்டார்.

வண்டியில் பூட்டப்பட்டிருந்த இரண்டு மாடுகளில் ஒன்று இறந்துவிட்டது. மற்றது காயமடைந்தது. சடையன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# டோக்கியோவில் இலங்கை தூதர் காலமானர்

டோக்கியோ, மார்ச் 18

ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதர் திரு. சுசந்தா டி' பொன்சேகா நேற்று டோக்கியோவில் காலமானர். டோக்கியோவிலுள்ள அவரது காரியாலய வாசஸ்தலத்தில் காலமான திரு. சுசந்தா டி' பொன்சேகாவுக்கு வயது 62.

காலமான திரு. பொன்சேகாவுக்கு இலங்கையில் மனைவியும், ஒரு மகளும் இருக்கிருர்கள். திருமதி சுசந்தா டி' பொன்சேகா, இன்று விமானம் மூலம் டோக்கியோ செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காலமான திரு. சுசன்தா டி' பொன்சேகாவின்பூதவுடலை விமானம் மூலம் இலங்கைக்குக் கொண்டுவருவதற்கான ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன.

1953-ம் ஆண்டில் டோக்கியோவுக்குச் சென்ற திரு. சுசந்தா டி' பென்சேகா கடந்த இரண்டு வருட காலமாக டோக்கியோவில், இலங்கைத் தூதராகக் கடமையாற்றினர்.

# பார்லிமெண்டில் கேள்வி

கொழும்பு, திங்கள்

நாளை பார்லிமெண்ட் கூடும் பொழுது யாழ்ப்பாணம் சுகாதாரசேவை ஊழியர் பலரின் தனிப்பட்ட பைல்கள் காணமற் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது சுகாதார மந்திரிக்குத் தெரியுமா என மந்திரியை டாக்டர் என். எம். பெரேரா கேட்கவிருக்கிருர். இந்த ஊழியர்கள் புதிய வைத்திய நற்சாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளார்கள் என்பதுபற்றிமந்திரிக்குத்தெரியுமா எனவும் திரு. பெரேரா கேட்பார்.



# மாணவர் மலர்



# பறக்கும் பாம்பு

—மகான்—

(8)

பறக்கும் பாம்பு சம்பந்தமாக, 'மக்கள் குரல்' பத்திரிகையின் விசேஷ காலைப் பதிப்பில் வெளியாகியிருக்கும் விபரங்களை நன்றாகப் படித்த சி. ஐ டி. ஷகான், தனது மனதுக்குள்ளேயே சிரித்துக்கொண்டார். பத்திரிகை நிருபர்களுக்கு தகவல்கள் எதுவும் கொடுக்காவிட்டால், அவர்கள் என்னென்ன மாதிரி கற்பனை செய்து எழுதுகிறார்கள் என்பதை எண்ணி எண்ணி, ஷகான் மனதுக்குள் சிரித்தார். 'பறக்கும் பாம்பு', பத்திரிகைகளுக்கு பெரும் பரபரப்பைக் கொடுக்கலாம். பத்திரிகைகள், பொதுமக்களுக்கு பாரதூரமான செய்திகளை-சில வேளைகளில் உண்மைக்கு மாறான செய்திகளையும் அறிவிக்கலாம். ஆனால் சி. ஐ டி. ஷகான்? இதுவெல்லாம், அவருக்கு தூசு போன்றவை. ஆனால், நாட்டில் பொய் வதந்திகள் பரவுவதை, பரவவிடுவதை சி ஐ டி. ஷகான் கண்டிப்பாக விரும்பமாட்டார்!

வாசித்த பத்திரிகையை மேசைமீது எறிந்துவிட்டு இன்ஸ்பெக்டர் பிரான்சிஸுடன் பேச்சுக்கொடுத்தார் ஷகான்.

"பிரான்சிஸ்...இதைப்பற்றி நீங்கள் அதிகம் கவலைப்படத் தேவையில்லை. 'பறக்கும் பாம்பு' விஷயத்தில் 25 வீதம் நம்பக்கம் சரியாகிவிட்டது. இதை வைத்துக்கொண்டே நாம் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கலாம். அது சரி பிரான்சிஸ், நான் ஏதோ சொல்கின்றேன்...ஆனால் உங்கள் சிந்தனைகள் வேறு எங்கேயோ அல்லவா..."என்று கேட்டார். சி. ஐ. டி. ஷகான்.

"இல்லை ஷகான; பறக்கும் பாம்பு பன்படுத்தப்பட்டு வருகிறது என்று நீங்கள் சொன்னதும், எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஆமாம்; ஒருவன் ஏன் பாம்பின் உதவியுடன் அதுவும், அற்புத-அதிசய பறக்கும் பாம்பைக் கொண்டு பலரைக் கொலை செய்யவேண்டும்...?" என்று ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ்!

"ம்...ம்...இதில்தான், உங்களுக்கும் எனக்கும் வித்தியாசம் இருக்கிறது பிரான்ஸ். உங்களுக்கு இன்னும் நான் சொன்னதில் நம்பிக்கையில்லை. என்ன அப்படித்தானே...? பரவாயில்லை பிரான்சிஸ். எனக்கு என் மனமே சாட்சி. ஆனால், நான் ஒன்று சொன்னேன் என்றால் அதில் ஆயிரம் அர்த்தங்கள் இருக்கும் என்று நினைக்கிறீர்கள். ஒரு நாளைக்கு உண்மை தெரியாமலா போய்விடும்?" என்று சற்று நிதானமிழந்தே கூறினார் சி. ஐ. டி. ஷகான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இன்ஸ்பெக்டர் பிரான்சிஸின் மனதில் என்ன தோன்றியதோ தெரியவில்லை. அவரின் முகத்தில் ஒரு மாற்றம் தோன்றி மறைந்தது! இன்ஸ்பெக்டர் பேச்சைத் தொடர்ந்தார்.

"ஷகான்; என்னைத் தவறாக நீங்கள் புரிந்துகொண்டுவிட்டீர்கள். ஏன் நான் ஒழித்து மறைக்கவேண்டும்? எனக்கென்னவோ, பறக்கும் பாம்பு பயன்படுத்தப்பட்டுவருகிறது என்று நீங்கள் சொல்வதில் எனக்கு நம்பிக்கையில்லை ஷகான். ஒருவன் எதற்காக பலரை, பறக்கும் பாம்பின் உதவியுடன் கொலை செய்யவேண்டும்? நேரடியாக அவன் கொலை செய்தால் என்ன? பறக்கும் பாம்புக் குடும்பம்தான் இக்கொலைகளை நடத்துகிறது. இதுதான் ஷகான் என் மனதைக் குழப்பிக்கொண்டிருக்கிறது" என்றார் இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ்.

ஷகான் இலேசாகச் சிரித்துக்கொண்டார். அவரின் வார்த்தைகளில்தான் ஆயிரம் அர்த்தங்கள் இல்லாவிட்டாலும், அவரின் ஒவ்வொரு சிரிப்பிலும் ஆயிரமாயிரம் அர்த்தங்கள் இருக்கும்! அப்படியென்றால் சி. ஐ. டி ஷகான் கடைசியாகச் சிரித்த சிரிப்பு......? அது ஒரு வகையான பிளவுச் சிரிப்பு! எவரையும் அறியாமல் நேரம் விரைவாகச் சென்றுகொண்டிருந்தாலும், ஷகானுக்கும் பிரான்ஸிசுக்குமிடையே ஏற்பட்ட கதை பேச்சுக்களில் கருத்துவேற்றுமை இடம்பெற்றதாலும், சி. ஐ. டி. ஷகான் அங்கிருக்க மேலும் விரும்பவில்லை! "நேரமாகிவிட்டது. நான் சென்றுவருகிறேன். காலம் பதில் சொல்லும்" என்று மூன்றே வாக்கியங்களைக் கூறி முடித்துக்கொண்டு இன்ஸ்பெக்டர் பிரான்சிஸிடம் ஷகான் விடை பற்றுச் சென்றுவிட்டார்! எவருடைய வேண்டுகோளுக்காக சி. ஐ. டி. ஷகான், "பறக்கும் பாப்பு" விஷயத்தில் நுழைந்தாரோ, அவரே (இன்ஸ்பெக்டர்), சி. ஐ. டி. ஷகானை தப்புக்கணக்குப் போட்டுவிட்டார்! இதன் முடிவு? எல்லாம் நன்மைக்கே!

⁂ ⁂ ⁂

சி. ஐ. டி. ஷகான் இலங்கைத் தமிழர். மட்டக்களப்பைத் தனது தாயகமாகக் கொண்ட, 23 வயதுடைய இளைஞரான அவர், துப்பறியும் ஆர்வம் நிரம்பப் பெற்றவர். 19 வயதிலிருந்தே துப்பறியும் தொழிலில் ஈடுபட்டு பல வெற்றியீட்டியிருக்கிறார். இந்தியாவுக்குக் கூடச் சென்று, பல லட்ச ரூபா பெறுமதியான கள்ள நோட்டு மோசடிகளை, இந்திய அரசாங்கம் வியப்புறும்வண்ணம் கண்டுபிடித்து தாய்நாட்டுக்குப் புகழைத் தேடிக்கொடுத்த ஷகானை அறியாதவர்கள் இலங்கையில் எவருமில்லையென்றுதான் சொல்லலாம். ஆனால் "பறக்கும் பாம்பு" மர்மம், சி. ஐ. டி. ஷகானது முன்னேற்றத்துக்கு, ஒரு பலப்பரீட்சை என்றுதான் சொல்லலாம். கொலை, கொள்ளை என்றால், சி. ஐ டி. ஷகானுக்குத் தண்ணீர் பட்டபாடு! ஆனால் பாம்பென்றால் படையும் நடுங்குமே! பறக்கும் பாம்பென்றால்? உண்மையிலேயே சி. ஐ. டி. ஷகானுக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு பரீட்சை தான் இது!

⁂ ⁂ ⁂

தனது காரை, ஷெட்டுக்குள் நிறுத்திவிட்டு வீட்டுக்குள் நுழைந்தார் சி. ஐ. டி. ஷகான். அவரின் மேசைமீது பல கடிதங்கள் இருந்தன. ஒவ்வொன்றாக உடைத்துப் பார்த்தார். நண்பர்களிடமிருந்தும், உறவினர்களிடமிருந்தும், வேறு பலரிடமிருந்தும் கடிதங்கள் வந்திருந்தன. முத்திரையிடப்படாத, ஆனால் 'சீல்' குத்தப்பட்ட ஒரு கடிதம் அவரின் கண்களுக்குத் தெரிந்தது! கையிலெடுத்தார். ஒரு முறை அந்தக் கடிதத்தை ஷகான் பார்த்தார்! அது ஒரு அரசாங்கக் கடிதம். அந்தக் கடிதத்தில் முக்கியமான விபரம் இருந்தது!

(தொடரும்)

## உங்கள் பிரச்னை

ரி. சோதிரத்தினம், ஜி. ஸி. ஈ. (ஈ) உடுப்பிட்டி: "நாம் அறிந்த பெரியோர்கள் என்ற தலைப்பில், நான்கு கட்டுரைகள் அனுப்புகின்றேன். தொடர்ந்து அனுப்பலாமா?"

உங்களின் கடிதம் கிடைத்தது. ஆனால் கடித உறைக்குள் வேறு ஒருவர் எழுதிய நான்கு கட்டுரைகள் இருக்கின்றன. அக்கட்டுரைகள் எப்படி உங்களது கவருக்குள் வந்தது?

⁂ ⁂ ⁂

ஆர். ஜெயமலர், பிரதான வீதி, திருக்கோணமலை: "பறக்கும் பாம்பு, ருசிகரமான தொடர் நவீனம். அதை எழுதும் ஆசிரியருக்கு எனது பாராட்டுதலை தெரிவிக்கவும். கதையின் முடிவுக் கட்டத்தில் இடம்பெறும் வசனங்கள், அடுத்த அத்தியாயம் எப்போது வரும் என்ற ஆர்வத்தை எமக்கு ஊட்டுகிறது பறக்கும் பாம்பு எத்தனை அத்தியாயங்களுக்கு இடம் பெறும்?"

பறக்கும் பாம்பு-தொடர் நவீனத்தில் இனிமேல்தான் உடல் சிலிர்க்கும் கட்டங்களும், சிந்தனையைத் தூண்டும் பல தகவல்களும் இடம்பெறும் தொடர்ந்து படித்தால் தான், அதில் உங்களுக்கும் நன்மையுண்டு. அத்தியாயங்களைக் கணக்கிடாதீர்.

## சர்ச்சிலை காப்பாற்றிய சிறுவன்

—கே. கணபதிப்பிள்ளை—

சர்ச்சில் சிறுபிள்ளையாக இருக்கும் பொழுது ஒருநாள் நீச்சல் குளத்தில் விழுந்து விட்டார். வெளிவர வழிதெரியவில்லை. அப்போது கரையில் நின்றுகொண்டிருந்த சிறுவன் ஒருவன், குதித்து அவரைக் காப்பாற்றினன். சர்ச்சில் குடும்பத்தார் அவனுக்கு என்ன பரிசு வேண்டுமென்று கேட்டதற்கு, அச்சிறுவன், வைத்தியத் தொழிலுக்குப் படிக்கத் தனக்கு உதவிசெய்ய வேண்டுமென்று சொன்னன். அதன் படியே அச்சிறுவனுக்கு உதவி செய்தனர்.

பல வருடம் கழித்து சர்ச்சிலை, இரண்டாம் மகாயுத்தத்தின் நடுவில் கடும் நோயால் துன்புற்றுக் காண்டிருந்தார். உயிர் ஊசலாடும் தருணத்தில், தகுந்த ஒரு புதிய மருந்தைக் கண்டுபிடித்த அறிவாளியை சர்ச்சில் கண்டபின்னர், அவர் தம்மைச் சிறுபிள்ளையாக இருந்த பொழுது காப்பாற்றிய அச்சிறுவன் தான் என்று அறிந்து மகிழ்ந்தார். "ஒரே மனிதர் மற்றவரின் உயிரை இருமுறை காப்பாற்றியது அதிசயம் ஆனால் என் விஷயத்தில் உண்மை" என்றார் சர்ச்சில். அந்தச்சிறுவன் யார் தெரியுமா? பென்சிலினைக் கண்டுபிடித்த பிளெமிங்தான்!

# மூளைக்கு வேலை

**கடந்த சில வாரங்களுக்குப் பின்னர் பலரின் வேண்டுகோளுக்கிணங்க இப்பகுதி சென்ற வாரம் மீண்டும் வெளியானது சென்ற வாரப் போட்டியில் பலர் பங்குபற்றியிருந்தார்கள். ஆனல் சென்ற வாரம் நான்கேட்ட கேள்விக்கு ஒருவரும் சரியான விடையெழுதவில்லை!**

சென்ற வாரம் நான் கேட்ட கேள்விக்குப் பலர் பலதரப்பட்ட விடைகள் எழுதியிருந்தார்கள். ஆனல் சரியான விடையை எவருமெழுதவில்லை ஆகையினல் சென்ற வாரம் வெளியான கேள்வியை மீண்டும், சிறிது விளக்கமாகக் கேட்கின்றேன் முயற்சி பண்ணிப் பாருங்கள்!

### இவ்வாரக் கேள்வி

தாத்தா ஒருவர் எனக்கு ஒரு கடிதம் கொடுத்தார். தாத்தாவுக்கு வந்த அந்தக் கடிதத்தை வாசித்துக் கூறும்படி தாத்தா என்னைக்கேட்டார். கடிதத்தை படித்துக் கூறினேன். 'யார் எழுதியிருக்கிறார்' என்று தாத்தா என்னைக்கேட்டார் கையெழுத்தைப் பார்த்தேன். ஒன்றுமே புரியவில்லை பேனவால், தமிழில் கடிதத்தை எழுதிய அவர் திகதியை மட்டுமே பேனவால் எழுதியிருந்தாரே தவிர விலாசத்தை ஏதோ தெரியவில்லை அவர் எழுதவில்லை! இருந்தபோதிலும் யார் கடிதமெழுதினர் என்பதை நான் கண்டுபிடித்துவிட்டேன்.

கேள்வி என்னவென்றால் தாத்தாவுக்கு என்ன முறையானவர் அந்தக்கடிததை எழுதியது என்பதல்ல! தாத்தாவுக்கு அந்தக் கடிதத்தை எழுதியவரின் பெயர் என்ன என்பது தான் கேள்வி! கடிதத்தில் அவர் எழுதிய கையெழுத்து எனக்குப் புரியவில்லை. கடித மேலுறையிலும் அவரின் விலாசம் இல்லை ஆனல் தாத்தாவுக்கு யார் எழுதியது? எழுதியவரின் பெயர் என்ன என்பதை நான் கூறிவிட்டேன்! எப்படி? முடியுமா? முயற்சியுங்கள்.

என்ன கேள்வி - உங்கள் மூளைக்கு வேலையைக் கொடுக்கிறதோ...? சிந்தியுங்கள் விடை தெரிந்தால் சனிக்கிழமைக்கு முன்னதாக விசையை தபாலட்டையில் மாணவர்மலர், ஈழநாடு த. பெ. 49 யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள் மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்.

—சாந்தா

## பொது மேடை

பூலோகநாதன், கயிலா, புதுவீதி, கொய்யாத்தோட்டம்:"செவ்வாயில் மலரும் மாணவர் மலரில் மூளைக்குவேலை பகுதி மீண்டும் இடம் பெற்றதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்."

⁂ ⁂ ⁂

டி. சரவணபவன், சுன்னுகம்:"பறக்கும் பாம்பு மிகவும் நன்ருகவிருக்கிறது. மாணவர் மலரில் வெளியாகும் அம்சங்கள் வரவேற்சத்தக்கன."

⁂ ⁂ ⁂

க. சிதம்பரநாதன், மாதகல்: "அறிவுச் செல்வம் பலே ஜோர். உலக விஞ்ஞானிகள் கட்டுரை மிகவும் நன்ருக விருந்தது."

⁂ ⁂ ⁂

'பறக்கும் பாம்பு' தொடர் நவீனத்தைப் பாராட்டி, சுன்னுகம புஷ்பமலர்; வட்டுக்கோட்டை ஆர். எஸ். புவிநாயகம்; திருக்கோணமலை வின்லஸ்லோஸ்; கண்டிக்குளி தேவராணி, வேதமலர், ரஞ்சிதபூஷணி; மல்லாகம் கே. மனேகரன் ஆகியோர் எழுதியிருககின்றார்கள். இப்பகுதியில் வெளியாகும் கதை, கட்டுரைகள் பற்றிய உங்களது கருத்தை, உங்களது முழு விலாசத்துடன் பொதுமோடை, மாணவர் மலர், "ஈழநாடு" யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

# குறள் காட்டும் நெறி

—ஈழத்துச் சிவானந்தன்—

வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் அவருக்குத் தெரிந்த ஒரு பேரறிஞர் இருந்தார். இலக்கியம், சமுதாயம், அரசியல் போன்றதுறைகளில்அப்பேரறிஞர்சிறந்து விளங்கினர். எந்தச் சந்தேகங்களையும் தெளிவுபடுத்தும் ஆற்றல் நிறையப்பெற்ற அவ்வறிஞர் உள்ளத்தில் அமைதியோ, மகிழ்வோ மருந்துக்கும் கிடையாது. இதுபற்றி குறையாகவே அவருக்குப்பட்டது. வள்ளுவர் பெருமான் அப்பேரறிஞரின் வித்துவத்தன்மையைக் கேள்வியுற்று இறும்பூதடைந்த போதும், சிறிது கவலைப்பட்டார்.

ஒருநாள் பேரறிஞர் பெரியதொரு கூட்டத்துக்குத் தலைமை தாங்கி இலக்கியச் சொற்பொழிவுகள் செய்தார். அக்கூட்டததிற்கு வள்ளுவர்பெருமானும் சென்றிருந்தார். தன் சொற்பொழிவினூடே தனது மனக்குறையையும் வெளியிட்டார் அவ்வறிஞர். "என்ன வழிகளைத் தெரிந்திருந்தாலும் மனிதனின் மனம் அமைதியுற வழிதெரியவில்லை. கற்றதனல் என்னபயன்? எனக்கு அதன் விடையும் விளங்கவில்லை. சபையில் இருப்பவர்கள் யாராவது கற்றதனல் ஆய பயன் என்ன? என்ற விறைவுக்கு விடையையும், மனம் மகிழ்வு பெற வழியையும் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தால—எனக்கும், என்போன்றோருக்கும் பெரும் பயனயிருக்கும்" எனக் கூறி இருப்பிடம் சென்றார்.

இரு நிமிடங்களாகியும் சபையில் சுபாடவில்லை. ஒரு உருவம் எழுந்து மேடையை நோக்கிச் சென்றது. சபையில் இருந்தவர்களில்சிலர் ஆச்சரியத்தால் அவ்வுருவத்தைபபார்த்தனர். சிலர் "நமது வள்ளுவன் போகிறன், பொருத்தமானதைச் சொல்வான்"எனப் பேசிக்கொண்டிருந்தனர். இதற்குள் வள்ளுவர் மேடையிலேறிவிட்டார். பேரறிஞர் புலன்களை அடக்கிக் காதுகளைக் கூர்மையாக்கி-வள்ளுவர் சொல்லைக் கவனிக்க ஆயத்தமானர். வள்ளுவர் கருக்கமா

(7ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் புதுவருடபேச்சு, கட்டுரை சிறுகதைப் போட்டி

## முஸ்லிம்வாலிப இயக்கம்நடத்தும்

கொழும்பு, திங்கள்

வருடாவருடம் முஸ்லிம் புத்தாண்டு தினத்தில் வை. எம். எம். ஏ. இயக்கம் பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி ஆகியவை நடத்தி வருகிறது. இம்முறை வழக்கமான பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி இவைகளுடன் "சிறுகதைப்போட்டி" "வானொலி நாடகப்போட்டி", "குழந்தை இலக்கியப்போட்டி" ஆகிய மூன்றையும் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

### பேச்சுப்போட்டி

ஏஸ். பீ. ஏ. ஹமீத் நினைவு கேடயத்திற்காக அகில இலங்கைத் தமிழ்ப் பேச்சுப்போட்டியில் 15-க்கும் 25-க்கும் இடைப்பட்ட வயதுள்ள ஆண், பெண் சகலரும் இனமதவேறுபாடின்றி கலந்து கொள்ளலாம். பேச்சக்குரிய தலைப்புகளாக ஏழு தரப்படும். 10 நிமிடங்களுக்கு அவைகளில்எதைப் பற்றியும் பேசத் தயாராக இருத்தல் வேண்டும்.

வெற்றிபெறுபவருக்கு 1. எஸ். பீ. ஏ. ஹமீத் நினைவுக் கேடயம், 2. பரிசுக்கிண்ணம், 3. புத்தகப்பரிசுகள், 4. வை. எம் எம். ஏ. பாராட்டுப்பத்திரம்.

இரண்டாவது, மூன்ருவதாக வருவோர்க்கு 1. பரிசுக்கிண்ணம், 2.புத்தகப் பரிசுகள், 3. வை. எம். எம். ஏ. பாராட்டுப்பததிரம்.

### கட்டுரைப்போட்டி

பி. டி. எஸ். டீன் நினைவுப் பதக்கத்திற்கான கட்டுரைப் போட்டி பாடசாலை மாணவ மாணவிகளுக்கு மட்டுமே நடைபெறும். அவர்கள் 15 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும். இன, மத வேறுபாடின்றி ஆண், பெண் சகலரும் இதிலும் கலந்து கொள்ளலாம். கட்டுரைக்கான விஷயங்கள் நான்கு தரப்படும். அவைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து எழுத வேண்டும்.

வெற்றிபெறுபவர்க்கு பி. டி. எஸ். நினைவுப்பதக்கம், புத்தகப்பரிசுகள், வை. எம். எம். ஏ. பாராட்டுப்பத்திரம், ஒலிபரப்புக்குத் தகுதியெனக் கண்டால் முஸ்லிம் நிகழ்ச்சியில் ஒழுங்கும் அதற்கான சன்மானமும்.

இரண்டாவது மூன்ருவது பரிசு பெறுவோர்க்கு: பரிசுப் பதக்கம், புத்தகப்பரிசுகள். வை எம். எம். ஏ. பாராட்டுப்பத்திரம்.

### சிறுகதைப்போட்டி

முஸ்லிம் மக்களின் பழக்க வழக்கங்களையொட்டிய மண்வளங் கொண்ட கதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இன மத வேறுபாடும் வயது வித்தியாசமுமின்றி அனைவரும் கலந்து கொள்ளலாம். வளரும் எழுத்தாளர்களுக்கு ஒரு சில சலுகைகள் உண்டு.

முதற்பரிசு பெறுபவர்க்கும் இரண்டாம் மூன்ரும் பரிசுகள் பெறுவோர்க்கும் ஈழத்து முஸ்லிம்-தமிழ் எழுத்தாளர்கள் ஒன்று சேர்ந்தளிக்கும் ரொக்கப்பரிசுகள், பிரசுரத்திற்கு பத்திரிகையில் ஒழுங்கு வை. எம். எம். ஏ. பாராட்டுப்பத்திரம்.

### வானொலிநாடகப்போட்டி

முஸ்லிம் மக்களின் பழக்க வழக்கங்களைப் பின்னணியாகக் கொண்டு "வானொலிக் கேற்ற" முறையில் எழுதப்படல் வேண்டும். சரித்திரத் தழுவல்களுக்கு இடம் உண்டு. ஆனல் அம்முயற்சிக்கு முதற் பரிசி அளிக்கப்படமாட்டாது.

முதற்பரிசு பெறுபவர்க்கும் இரண்டாம்பரிசு பெறுபவர்க்கும் இலங்கை வானொலி தமிழ்-முஸ்லிம் நடிகர்கள் சேர்ந்தளிக்கும் ரொக்கப்பரிசுகள், முஸ்லிம் நிகழ்ச்சிப்பகுதியில் ஒலிபரப்புக்கு ஏற்ற ஒழுங்குகள், அதற்குரிய சன்மானம், வை. எம். எம். ஏ. பாராட்டுப்பத்திரம்.

### குழந்தை இலக்கியப் போட்டி

குழந்தை இலக்கிய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இலங்கியங்கள் சிருட்டிக்கப்படவேண்டும். "கதை", "கதைப்பாட்டு", "குட்டிநாடகம்" எதுவாகவும் இருக்கலாம். இன மத வேறுபாடும் வயது வித்தியாசமுமின்றி அனைவரும் கலந்து கொள்ளலாம்.

முதற்பரிசு பெறுபவர்க்கும், இரண்டாம், மூன்ரும் பரிசுகள் பெறுவோர்க்கும் "குழந்தை எழுத்தாளர்"கள் ஒழுங்கு செய்தளிக்கும் ரொக்கப்பரிசுகள், பிரசுரத்திற்குப்பத்திரிகை, வானெலி ஆகியவற்றில் ஒழுங்கு, வை. எம். எம். ஏ. பாராட்டுப்பத்திரம்.

---

## இந்தியவீரர்கள் இங்கு வருகிருர்கள்

கொழும்பு, திங்கள்

இம்மாதம் 21-ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் தேசிய பாட்மின்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் தலைசிறந்த ஐந்து பாட்மின்டன் விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ளவிருக்கிருர்கள்.

இந்த விளையாட்டுப்போட்டி கொழும்பு வை. எம். சி. ஏ. மைதானத்தில் மார்ச் 29-ம் திகதிவரை நடைபெறும்.

இலங்கை ரசிகர்களை முன்னர் மகிழ்வூட்டிய அமிரிட் திவான், கனிலா, சரோஜினி செல்வி கே. இந்துஜா, வசந்த கலம்பி ஆகியோரே இந்தியாவிலிருந்து இங்கு வரவிருக்கும் ஐந்து விளையாட்டுவீரர்களவர்.

---

## சனசமூகநிலைய ஆண்டுவிழா

உடுப்பிட்டி, ஞாயிறு

நெல்லியடி சனசமூகநிலையத்தின் 15-வது ஆண்டு நிறைவு விழா ஏப்ரல் மாதம 14-ந் திகதி கொண்டாடப்படும் என்றும் அன்றைய தினம் வழமை போல் விளையாட்டுப்போட்டி நடத்துவதென்றும், மட்டுநகர் நகைச்சுவையாளர் மாஸ்டர் சிவலிங்கத்தை பேச்சாளராக அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

## குறள் காட்டும் நெறி

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

கவே சொன்னர். பேரறிஞர் விளங்கிக்கொண்டார். விளங்காத பாமர மக்களுக்கு அவ்வறிஞர் விளக்கவுரை நல்கினர்.

வள்ளுவர் பெருமான் சுருங்கச் சொன்ன விடயங்கள் இவைதாம்:

"கற்றதனலாய பயனென்
கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்"
"தனக்குவமை இல்லாதான்
தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

---

## வானெலி நிகழ்ச்சிகள்

### செவ்வாய் 19-3-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 இருபது கேள்விகள், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 திசை கடந்த இசை — இசைச் சித்திரம், 9-45 எல். குருசாமி — நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 இசைக் கோவை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'தொழில் இன்பம்' — பேசக, 7-45 திருவிடமருதுர் பி, எஸ். வீருசாமிப்பிள்ளை — நாகஸ்வரம், 9-15 நாட்டுப்பாடல்கள், 9-30 'தேன்கூடு' — நாடகம், 9-45 கோ. வன்மீகநாதன் — பேச்சு,

---

## விஷமருந்தி தற்கொலை

ஊர்காவற்றுறை, திங்கள்

ஊர்காவற்றுறை 'கரம்பு' ரோட்டில் வசித்த வேலன் சுபபிரமணியம் என்னும் தொழிலாளி நச்சுத் திராவகமருந்தித் தற்கொலை செய்துகொண்டார். தற்கொலை செய்து கொண்ட நபரான சுப்பிரமணியம் சிலகாலமாக மனஸ்தாபப்பட்டு தமது மனைவியைப் பிரிந்து வாழ்ந்தார் என்றும் இது சம்பந்தமாக இவரது மனைவி ஊர்காவற்றுறை பொலிஸ் நீதிமன்றத்தில் 'ஜீவனும்சம்' கோரி வழக்குத் தொடர்ந்துஇருந்தார் என்றும் கூறப்படுகிறது.

இம்மாதம் 12-ம் திகதி வழக்குத் தவணையின்போது ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் எண்பது ருபா ஜீவனும்சம் கட்டும்படி தீர்ப்பளித்தார். பணத்தைக் கட்டுவதாக நீதிபதியிடம் தவணை கேட்டு வந்த அடுத்தநாள் இவர் உப்புக் குளத்துக்கரையிலுள்ள ஒரு கிணற்றருகே இறந்துகிடக்கக் காணப்பட்டார். மரண விசாரணையின்போது தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## அரசாங்கம் ஏற்கிறது

உடுப்பிட்டி, சனி

கரவெட்டி மேற்கு நாவலர் மடம் மெதடிஸ்த மிஷன் பாடசாலையை அடுத்தமாதம் 3-ம் திகதி அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவிருக்கிறது.

---

# "சமய அடிப்படையில் கல்வி அளிக்கப்படவேண்டும்"

## சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத் தேர்வில் உதவி வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், திங்கள்

'கல்வி உயிர்க்கு உறுதிதரக் கூடியது. மாணவர்களுக்கு சமய அடிப்படையில் கல்வி போதிக்க வேண்டும்' என்று உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் நேற்றுக் காலை வண்ணர்பண்ணை நாவலர் சைவபபிரகாச வித்தியாசாலையில் அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம் நடத்திய திருவாசகப் போட்டி இறுதித் தேர்வை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும்பேசியதாவது: திருமுறைகள் மன அமைதியோடு பாடபபடுதல் வேண்டும். வயது வேறுபாடுகளுக்கு ஏற்ப திருமுறைகள் ஓதுவது நன்று. சமயபாடம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது நமது சமயத்திற்கு ஒருபொற்காலம் ஆரம்பமாகின்றது என்பதனை நினைவூட்டுகிறது.

சைவபபுலவர் பட்டதாரிகள் சங்கத்தலைவர் திரு. வ. செல்லையா தமது முன்னுரையில், சைவப்புலவர் பட்டதகரிகள் சங்கம் செய்யும் நற்பணிகள் அனைத்திற்கும் காரணகர்த்தாக்களாக வளங்குபவர் உதவி வித்தியாதிபதியவர்களே என்றும் இத்திருமுறைப் போட்டியை தாம் நடாத்துவதற்கு யோசனை கூறி வழிவகுத்துத் தந்ததும் அவர்களே என்றும் கூறினர்.

வரவேற்புரை நிகழ்த்திய பண்டிதர் இ. திருநாவுக்கரசு தமது உரையில் கீழைத்தேச கலாச்சாரப்பட்டதாரிகள் சமாஜம் நிறுவப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினர்,

மேற்படி சங்க போஷகர் திரு. குமாரசாமிப்புலவர், காரியதரிசி சைவப்புலவா ச. சச்சிதானந்தம ஆகியோரும் பேசினர்கள். அடுததுத் தேர்வு நடைபெற்றது.

மத்திசஸ்தர்களாகப் பின்வருவோர் கடமையாற்றினர்கள்.

சைவப்புலவர் த. குமாரசாமி புலவர், வித்துவான் இ. திருநாவுக்கரசு,சங்கீதபூஷணங்கள் திருமதி மகாதேவா, கே. ஆர். நடராசா, செல்வி செல்லையா, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை.

**அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கதிருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி மத்திய இறுதிப் போட்டி முடிவுகள்.**

### கீழ்ப்பிரிவு (ஆண்கள்)

1. வே. தயாளன், ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலை, கல்வயல். 2.சி. சிவசுப்பிரமணியம், சித்திரமேழி பழனியானந்தன் சபை, இளவாலை. 2. I. த. கலாமணி, தேரையடி இந்துக் கல்லூரி, கரவெட்டி. II. கு.வி கினேஸ்வரன் தெ.மேற்கு சைவவித்தியா விருத்திச்சங்கம் ஏழாலை.

### கீழ்ப்பிரிவு(பெண்கள்)

1. வே. திலகவதி, ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலை, கல்வயல். 2. பொ. லோகநாயகியம்மா ஸ்ரீசண்முகானந்த வித்தியாசாலை , கல்வயல். 3. அ சிவனேஸ்வரி, சதானந்த வித்தியாசாலை அளவெட்டி.

### மத்தியபிரிவு(ஆண்கள்)

1. வி. சதாசிவம் அமிர்தாம்பிகை வித்தியாசாலை நுணுவில் கிழக்கு. 2 ச. வரதராசேஸ்வர சர்மா, மயிலணி சைவவித்தியாசாலை சுன்னுகம். 3 கு தவராசசிங்கம் பாலர் ஞானோதயசபை தெல்லிப்பழை

### மத்தியபிரிவு(பெண்கள்)

1. வ. விமலாதேவி ஸ்ரீ சண்முகானந்தவித்தியாசாலை கல்வயல்.2. பொ. கனகேஸ்வரி சதானந்த வித்தியாசாலை அளவெட்டி. 3. மா. பரமேஸ்வரி அ. த. க.பாடசாலை கைதடி

### மேற்பிரிவு (ஆண்கள்)

1. நா. கோபாலகிருஷ்ணன் பாலர் ஞானோதயசபை தெல்லிப்பழை. 2. வ. தர்மலிங்கம் பழனியானந்தன்சபை சித்திரமேழி இளவாலை. 3. கா. தங்கராசா மயிலங்கூடல் கூட்டுப் பிரார்த்தனைச்சபை இளவாலை

### மேற்பிரிவு (பெண்கள்)

1. ந. உருக்குமணி முருமூர்த்தி வித்தியாசாலை அராலி தென்மேற்கு. 2. ச. சரஸ்வதி சதானந்தவித்தியாசாலை அளவெட்டி 3. அ. திலகவதி சதானந்த வித்தியாசாலை அளவெட்டி.

---

## தொழில் நுட்ப அறிக்கை

கொழும்பு, திங்கள்

ஐந்துபேர்கொண்ட தொழில் நுட்பக் கல்விக்கமிஷன் தனது அறிக்கையை அண்மையில் கவர்னர் ஜெனரலிடம் ஒப்படைத்தது. இவ்வறிக்கையில் மூவர் மட்டுமே கைச்சாத்திட்டுள்ளனர். திரு. டி. எஸ். முனசிங்காவைத் தலைவராகக் கொண்ட இக்கமிட்டியில் திரு. எஸ். ஞானலிங்கம், திரு ஏ. ஐ. மாக்கான் மரக்கார், திரு. ஜே. டி' மெல், திரு. எச். வூட் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

திரு. மெல் அறிக்கை தயாரிக்கப்படுவதற்கு முன்னரே காலமாகிவிட்டார். திரு. வூட் சென்ற ஆகஸ்டில் இங்கிலாந்து சென்ருர். இவ்வருடம் ஜனவரியில் அவர் இங்கு வருவாரென்று எதிர்பார்க்கப்பட்டபொழுதிலும் அவர் வரவில்லை. இதனலேயே மூவரின் கைச்சாத்துடனும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இங்லாந்திற்குச் சென்று அறிககையில் சொல்லப்பட்டுள்ள சில அம்சங்கள் பற்றி திரு. வூட்டுடன் ஆராய்வதற்கு அனுமதி தருமாறு கமிட்டித் தலைவர் கேட்டுக் கொண்டார். ஆனல் அரசாங்கம் அதற்கு அனுமதிக்கவில்லை.

---

## இந்திய நோட்டு கடத்த முயற்சி

### பிரயாணிக்கு அபராதம்

யாழ்ப்பாணம், திங்கள்

இந்தியப் பிரயாணி ஒருவர் 205 ருபாய் இந்திய நோட்டுகளை சட்டவிரோதமாகக் கடத்திச் செல்ல முயன்றபோது கண்டுபிடிக்கப்பட்டார். இந்த நோட்டுகளை அவர் டிரங்பெட்டியில் இரகசிய அறை ஒன்று செய்து அதில் மறைத்துவைத்திருந்ததனை சுங்க அதிகாரி திரு. ஏ. பரஞ்சோதி கண்டு பிடித்தார்.

வடபகுதி சுங்க சேகரிப்பாளர் திரு. கே. திருநாவுக்கரசு இதுசம்பந்தமாக விசாரணை நடத்தி 615 ருபாய் அபராதம் விதித்ததுடன் கடத்திச்செல்ல முயன்ற பணத்தைப் பறிமுதல் செய்யும்படியும் உத்தரவிட்டார்.

---

## சைவ மகாநாடு

யாழ்ப்பாணம், செவ்வாய்

அகில இலங்கைச் சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கத்தின் முதலாவது சைவமகாநாடு நாவலப்பிட்டியில் நடைபெறவிருக்கிறது. வருகிற சனிக்கிழமை நாவலப்பிட்டி கதிரேசன் மகாவித்தியாலயத்தில் இம்மகாநாடு நடைபெறவிருக்கிறது. சமயச் சொற்பொழிவுகளும், திருமுறைக கச்சேரிகளும் நடைபெறவிருக்கின்றன.

# "இனத்தைக் காப்பது மாதரின் கடமை"

## பெண்களுக்கும் ஆசிரியருக்கும் ராசமாணிக்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்வாய்
"வீரமகளிர் மரபில் வந்த தமிழ்ப் பெண்கள் சிங்களம் படித்துப் பரீட்சைக்குத் தோற்றுவது தமிழினத்திற்கே ஒரு சாபத்தீடு என்றே கூற வேண்டும். பெண்களின் இச் செயல்நீடிக்குமானல்நமது சமூகம்அழிந்து விடுவதோடுநாமும் சிங்களவர்களாக மாறிவிடுவோம். பெண்களின் இச் செயல் நமது இனத்தின் விமோசனத்தையே குழிதோண்டிப் புதைப்பதாகும்" என்று தமிழரசுக்கட்சித் தலைவரும் பட்டிருப்பு எம். பி.யுமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தமிழ்ப் பெண்களுக்கு பிரத்தியேகமாக விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. இராசமாணிக்கம் தனது வேண்டுகோளில் கூறியிருப்பதாவது:

தமிழ்ப் பண்பாடு என்று கூறும்போது நமக்கு பெண்களின் கற்புதான் முதலிடம் பெறுகிறது. பெண்கள் தமது கற்பை எவ்வாறு உயிரினும் மேலாலாகப் போற்றிப் பாதுகாக்கிறார்களோ அதுபோல அவர்கள் சிங்கள ஆதிக்கம் தமது இனத்தின் தன்மானத்திற்குப் பங்கம் விளைவிக்கும் செயலை மேற்கொள்வதனைத் தீவிரமாக எதிர்க்க வேண்டும். ஒரு இனத்தின் பெருமைக்கே காரணமாக, தூய்மை உள்ளவர்களான பெண்கள் தமது இனத்தைக் காக்கும் பணியில் ஈடுபட வேண்டும். இது அவர்களுடைய கடமை மட்டுமல்ல தமிழ் சமூகத்திற்கே செய்யும் பணியாகும்.

இம்மாதம் முற்பகுதியில் நடைபெற்ற சிங்களத் தகுதிப் பரீட்சைக்கு ஏராளமான தமிழ்ப் பெண்கள் தோற்றியது விசனிக்கத்தக்கதோர் செயலாகும். பெண்கள் சிங்களம் படிப்பதனால் நாளடைவில் அவர்கள் தமது குடும்பங்களிலும் சிங்களத்தைப் புகுத்தக்கூடிய நிலை உண்டாகிவிடும். குழந்தைகளுக்கு அவர்கள் சிங்கள அறிவைப் புகட்ட, அதனால் அவர்கள் சிங்களவர்களாகிவிடலாம். பெண்கள் வயிற்றுப்பிழைப்புக்காகச் சிங்களம் படிக்கும் தமது கணவர், சகோதரர்களைச் சிங்களம் படிக்கவேண்டாமெனத் தடை செய்ய வேண்டும். பெண்கள் தாம் சிங்களம் படிக்கும் செயலைக் கைவிட்டு இனத்தின் விடுதலைக்காகப் போராட்டங்களில் ஈடுபடவேண்டும். பெண்கள் தமது இனத்தின் விடுதலைக்கு உழைக்க வருக! என்று வெகு விநயமாக அவர்களை வேண்டுகின்றேன்.

திரு. இராசமாணிகம் சிங்களப் பரீட்சை சம்பந்தமாக தமிழாசிரியர்களுக்குப் பின்வரும் வேண்டுகோளை விடுக்கிறார்:

அரசாங்கம் ஆசிரியர்கள் மத்தியில் சிங்களத் திணிப்பை ஏற்படுத்த புதிய மாயவலை ஒன்றினை விரித்துள்ளது. தமிழ்ப் பிள்ளைகளுக்கு கல்வி போதிக்கும் தமிழாசிரியர்களுக்கு சிங்களம் தேவையில்லை என்று அரசாங்கம அறிவித்தும்கூட ஆசிரியர்கள் சிங்களத் தேர்வுக்கு செல்வது நல்லதல்ல. சில இடங்களில் சிங்களத் தகுதி இல்லை என்று நிறுத்திவைக்கப்பட்ட சம்பள உயர்வு மீண்டும் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது.

தற்போது தலைமையாசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் சிங்களம் படிக்க விரும்பும் ஆசிரியர்களின் பெயர்களை அனுப்பும்படியும் அவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் அமைக்க ஏற்பாடுகள் செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிங்களத் திணிப்புக்கு அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள புதிய தந்திரோபாயம் இதுவாகும். தமிழாசிரியர்கள் சிங்களப் பரீட்சைக்குத் தோற்றியிருப்பது இன்னும் நம்மிடமிருந்து அடிமை மனப்பான்மை நீங்கவில்லை என்பதை காட்டுகிறது.

பலவித நிர்ப்பந்தங்களுக்கிடையே வாழும் அரசாங்க ஊழியர்கள் தமது உத்தியோகத்தை இழக்கக்கூடிய நிலையிலேகூட சிங்களத் தேர்வு எழுதவில்லை. அவர்களைப் பாராட்டுவதோடு அமையாது நாமனைவரும் போற்றவேண்டியவர்களாக இருக்கின்றோம். அரசாங்கம் விரிக்கும் எந்த மாயவலையிலும் ஆசிரியர்கள் சிக்கிவிடக்கூடாதென்பதனை வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்

# வடபகுதி கிராம சபைகள் வருமானம் குறைவு

குரும்பசிட்டி, திங்கள்
"வடபகுதியிலுள்ள கிராம சபைகள் பலவும் வருமானம் குறைந்தனவாக உள்ளன. இதனல் கிராம அபிவிருத்தி வேலைகள் சரிவரச் செய்ய முடிவதில்லை. அரசாங்கம் கார், லொறி போன்ற வாகனங்களின் வரியை அறவிடுவதால் அதிக பணத்தைத் தேடிக்கொள்கின்றது. ஆனல் கார், லொறி ஆகிய வாகனங்களினல் வீதிகள் பல சீர்கேடு அடைந்து சேதமாகின்றன. இவ் வீதிகளைத் திருத்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளும் எடுப்பதில்லை. ஆகவே அரசாங்கம் மோட்டார் வாகனங்களுக்கான வரியை கிராமசபைகள் அறவிட அனுமதியளிக்க வேண்டும்." இவ்வாறு உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம் குரும்பசிட்டி கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மயிலிட்டி கிராமசபை குரும்பசிட்டி வவுணத்தம்பை ஒழுங்கையை பகிரங்க வேலைபகுதியினரிடம் ஒப்படைக்கும் முகமாக இவ் வைபவம் நடைபெற்றது. கிராமசபைத் தலைவர் திரு. இ இராஜதுரை இக் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். அரசாங்கத்தின் சார்பில் வடபகுதி பகிரங்க வேலைப்பகுதி என்ஜினியர் திரு. இரத்தினராஜா ஒழுங்கையை கிராமசபையிடமிருந்து கையேற்றுக் கொண்டார்.

### சுயமுயற்சி தேவை

திரு. தருமலிங்கம் மேலும் பேசுபோது கூறியதாவது:- கிராம அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நிறைவேற எல்லாவற்றிற்கும் அரசாங்கத்தை நம்பியிராது தமிழ் மக்கள் தமது சுயமுயற்சியால் கூட்டுறவு, சிரமதான இயக்கங்கள் மூலம் செய்யவேண்டும். அரசாங்க நன்கொடைப் பணத்தை தமிழ்ப்பகுதி ஸ்தல ஸ்தாபன சபைகள் பெற்றுக் கொள்ளக் கூடாது எனச் சிலர் கருதுகின்றனர். இது தவறாகும். யாழ்ப்பாணத்திலுள்ள மரவரி முறையை ஒழித்து தவறணை முறையாக்கி இதன் மூலம் வரும் வருவாயை ஸ்தலஸ்தாபன சபைகளுக்கு அளிக்க மத்திய அரசாங்கம் முன்வரவேண்டும்.

கி. மு. சங்க செயலாளர் பண்டிதர் வ. நடராஜன் நன்றியுரை கூறினர்.

—

# கஸ்தூரியார் சந்தியில் கைகலப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்
நேற்றிரவு சுமார் 8-30 மணியளவில் கஸ்தூரியார் சந்தியில் இரு கோஷ்டியினருக்கிடையே நடைபெற்ற கைகலப்பு காரணமாக மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

# எம். பி. க்கள் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், செவ்வாய்
விசேட வர்த்த ஆசிரியர் பயிற்சி வகுப்புக்கு ஆசிரியர்கள்மட்டுமே விண்ணபிக்கலாம் என்று இருப்பதனை எதிர்த்து பல பாராளுமன்றஉறுப்பினர்கள் கல்விமந்திரிக்கும், பிரதமமந்திரிக்கும் இரண்டாவது தடவையாக ஆட்சேபத்தந்தி அனுப்பிவைத்துள்ளனர். அவர்கள் அத்தந்தியில் 'கொடூரமான, நீதியற்ற பாரபட்சமான நடவடிக்கையை உடன் கைவிட்டு சிங்கள மாணவர்களுக்கு உள்ளது போல விண்ணப்ப நிபந்தனைகள் தமிழ் மாணவர்களுக்கும் சேர்க்கப்படவேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளனர்.

தமிழரசுக்கட்சி எம். பி.க்களான திருவாளர்கள் மு. பாலசுந்தரம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், எஸ். எம். இராசமாணிக்கம், வி. என். நவரத்தினம், வி. தர்மலிங்கம், அ. அமிர்தலிங்கம், பொ. மாணிக்கவாசகர், எம். ஈ. எச். முகமத் அலி, வி. ஏ. அழகக்கோன், வி. ஏ. கந்தையா, அ சிவசுந்தரம், இ. இராஜவரோதயம், டாக்டர் இ எம் வி. நாகநாதன், உடுப்பிட்டி எம். பி. திரு.மு. சிவசிதம்பரம், செனட்டர் மு. மாணிக்கம் ஆகியோர் ஆட்சேபத் தந்திகள் அனுப்பியுள்ளனர்,

# ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
தாரமும், இசையிலே அவருக்குள்ள பாண்டித்தியமும் பலரையும் பிரமிக்கச் செய்தது.

பின்னர் மகாராஜபுரம், மேடைக்கு வந்து, ஸ்ரீ தியாகராஜசுவாமியின் பாதங்களைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டு சற்றும் நிற்காமல் மளமளவென்று இசைமாரி பொழிந்து, எல்லாரையும் இன்பக்கடலில் ஆழ்த்தினர். இதற்குள் முடித்துவிட்டாரே, இன்னும் கொஞ்சம் பாடக்கூடாதா? என்று தோன்றியது. விழாவுக்காக பலநாள் அலைந்தும் அவர் இசையும் குரலும் சற்றும் களைக்கவில்லை.

இவ்வித விழாவுக்கு ஒழுங்கு செய்து நான்குநாள் நடத்தி, ஏராளமானவர்களை இன்புறுத்தியது சாதாரண பணியல்ல. அவரும் இதற்கு உதவியவர்களும் வாழ்க!

* *

இதைக் கண்டதும் இதே இடத்தில் நாவுக்கரசர்முதலிய நால்வருக்கும் தனித்தனி இசைவிழா நடத்தி அவரவர்கள் தந்த இசைச்செல்வங்களை வாரி வழங்கினல் எவ்வளவு நன்ருக இருக்குமென்று தோன்றியது. இசையுடன் பக்தியும் சேர்ந்து பரவினல் சமூகவளர்ச்சிக்கு எவ்வளவு நல்லது! சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து பாடினல் பாடுபவருக்கும் கேட்போருக்கும் எவ்வளவு இன்பம்! இவ்விதவிழாக்கள் இனி நடைபெற வேண்டுமென்றே இதை இங்கு எழுதுகிறேன்.

* * *

செல்வ நெடுமாடஞ்
சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச்
செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ் தில்லைச்
சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும்
செல்வஞ் செல்வமே.
—திருஞானசம்பந்தர்

# நாடெங்கிலும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
25 சதமாகவும் களுத்துறையில் இருபத்தாறரை சதத்திற்கு ஒரு கொத்து கூப்பன் அரிசியும் விநியோகிக்கப்படுகிறது. இதிலிருந்து இப்பொழுதுள்ள நிலைமையை அறிந்து இந்த வித மான அரிசிவிலை வித்தியாசத்திற்கு எதராக மக்கள் ஆட்சேபம் தெரிவிக்க வேண்டியது அவர்களைப் பொறுத்ததே.

தேவைக்கு அதிகமாக அரிசி உற்பத்தி செய்யும் பகுதிகள் தாம் செய்த முயற்சியால் சந்தோஷமடைய முடியவில்லை. அதாவது அவர்களுக்கு தாங்கள் உற்பத்திசெய்யும் அரிசியைப் பெறமுடியவில்லை அதற்குப் பதிலாக அவர்களுக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசியே வழங்கப்படுகிறது. வெளிநாட்டு அரிசிகளை இப்பகுதிகளுக்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யும் போக்குவரத்துச் செலவுகளும் விலை அதிகரிப்பு என்ற போர்வையில் அவர்களிடமே அறவிடப்படுகிறது. அதாவது அரிசி உற்பத்தி செய்யும்அவர்களே அதிக விலைகொடுத்து அரிசியும் வாங்கவேண்டியுள்ளது. திரு. சிவசுந்தரம் தனது அறிக்கையில் 1960—61 வரையான நிர்வாக அறிக்கையிலிருந்து ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள சனத்தொகை தேவைப்படும் அரிசி, விளைவிக்கப்படும் அரிசி, பற்றாக்குறையா அல்லது அளவுக்கு அதிகமான உற்பத்தியா என்பவை அடங்கிய அட்டவணை ஒன்றை எடுத்துக்காட்டியுள்ளார். அரிசிவிற்பனைவிலைபுதுக்க அமைக்கப்பட்டதால் 50 லட்சம் ரூபா வருமானம் அதிகரிப்பதாக அரசாங்கம் கூறுகிறது. அப்படி வருமானம் அதிகரிக்க வேண்டுமானல் நாடு பூராவும் ஒரு கொத்துக் கூப்பன் அரிசியை 27 சதமாக விற்பனை செய்வதன்மூலம் சுலபமாக பெறலாம். இதைப் போலவே மாவை ஒரு ருத்தல் 30 சதமாகவும், சீனியை ஒரு ருத்தல் 68 சதமாகவும் நாடு பூராவும் விற்பனை செய்வதால் 30 லட்சமும் 170 லட்சமும் முறையே மேலதிகமாகப் பெற முடியும்.

இதைவிட்டு, தேசிய ஒற்றுமையைக் குலைக்கக்கூடியவகையில் சமூக வித்தியாசம் காட்டும் நோக்கத்துடன் இடத்துக்கு இடம் விலையை மாற்றி விற்பனை செய்யக்கூடாது.


மகத்தான 2-வது வாரம்!
வீர காவியம்!!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜிதா (அட்டன்)
மொடர்ன் (பதுளை) தீவொளி (நுவரேலியா) ஜெமினி (குகலை) ஸ்ரீகிருஷ்ணு (திருகம்காணமலை)

மற்றும் திரைகளில்!

தொண்டு செய்யும் அடிமை உனக்கு சுதந்திர நினைவோ? என்று கொக்கரித்த வெள்ளையரின் கொட்டத்தை முறியடித்தான் — கப்பலோட்டிய தமிழன்.

★ பார்த்தோர் பரவசப்படுகிறார்கள்
★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிறார்கள்

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
சாவித்திரி
முத்துலட்சுமி
வி. நாகையா
குமாரி ருக்மணி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணாநிதி




மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்
கப்பலோட்டிய தமிழன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
அசோக்குமார், ஷக்கிலா
நடித்த
வறன்ட்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.